ANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.
V7, No.43. 1.11.1934.

m211, N28kN
N34.7.43
199193

நவம்பர் ANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு நவம்பர் மீ 1உ [No. 43

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 673
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 675
3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 677
4. வீடுமன்.
K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 680
5. அப்பர் (64 கலை-இதிகாசம்-பாண்டவகௌரவர்)
E. N. தணிகாசல முதலியார் B.A., B.L. 682
6. சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கையர்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 684
7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 685
8. நால்வகைப்பாக்களும் நாற்குலமக்களும்.
V. S. குழந்தைவேற்சாமிப் பிள்ளை 686
9. புயலின் கொடுமை
நவாலி. கா. சோமசுந்தரம் பிள்ளை 687
10. வர்த்தமானம் 688

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 11.

இதுகாறும் எடுத்தெழுதியவைகளிலிருந்து, மனித இனத்தில் இக்காலம் முன்னணி நிற்பவர்தம் சிந்தனை, நம் வாழ்க்கையின் தன்மை பொருள் பயன் முதலியவைகளின் திறத்தில் எவ்வகைச் செல்கின்றதென்பது செவ்விதின் யாவருக்கும் விளங்கியிருத்தல் வேண்டுமென நினைக்கின்றோம். இன்ன ஆராய்ச்சியொன்றுஞ் செய்யாமலே தம்முடைய வாழ்க்கையினைப் பொருளும் பயனும் உடையதாய் நடத்திவருகின்றவர் எத்தனையோபலர்; இவையனைத்தும் தெரிந்திருந்தும் அன்னவாறு நடத்தமாட்டாதவர் பின்னும் எத்தனையோ பலர். அவ்விரு இனத்தவரையும் பற்றி நாமொன்று மிங்கு எண்ணவேண்டியதில்லை. இவ்விரு இனத்தவர்களுக்கும் இடையே வேறோர் வகையினர் உளர்; அவர்தம் தொகையே அனைத்தினும் அதிகம்; அன்னவர்க்கு இந்தச் சிந்தனை அதிகமும் உதவியாயிருக்கும்.

முன்னினும் இப்பொழுது இவ்வுலகம் நாகரிகம் அடைந்திருக்கின்றதென்பதோ உண்மையே; மற்று இது உண்மையாயிற்றே என்பதைத்தான் எண்ணி அழவேண்டி யிருக்கின்றது. கலாநிலய வாசகர்களுக்கு, கல்சர் (Culture) என்னுஞ் சொல்லினுள் அடங்கியுள்ள கருத்தெல்லாம், முன்னைய கட்டுரைகளால், நன்கு விளங்கியதோடு நினைவிலும் இருத்தல் வேண்டும். அக்கல்சரை அழிப்பது இந்நாகரிகம். உலகத்துப் பற்பலதேயங்களின் சரித்திரங்கள் எல்லாம், கல்சரின் அழிவே நாகரிகத்தின் ஆரம்பமா யமைவதை வேண்டிய அளவு காட்டித்தந்திருக்கின்றன. குணத்தின் சிறப்பைக் கல்சர் என்றும், ஒழுக்கத்தின் வகையை நாகரிகம் என்றும் ஒருவாறு இக்கட்டுரையின் பொருட்டுவேறுபடுத்திக்காட்டலாம். வாய்மையோடு ஈகை நீதி கருணை முதலியவைகளின் தொகுதி ஒருவனுடைய குணமாம் (Character). அவனது அடிப்படையான அவ்வொரு குணத்தின் பல கிளைகளாக இவை தோன்றும்பொழுது, அவன் வாழ்க்கையின் ஆணிவேர் கல்சரில் ஊன்றி யிருக்கின்றதென்பதை உணர்ந்துகொள்ளலாம். மரம் என்பது தனித்தனி அதன் கிளைகள் அல்ல. ஆயினும், கிளைகள் அனைத்தும் சேர்ந்து, அடிமரம் வேர் அனையவைகளுடன் மரமென்ன லாகின்றது. அவ்வாறே, வாய்மை வண்மை நீதி கருணை ஆண்மை பொறை அனைய இவைகளைத் தனித்தனி ஒருவனுடைய குணம் என்னல் பிழை. இவைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்தமையால் உண்டாகிய வொரு பிரிக்கப்படா நிலையே ஒருவன் குணம். இந்தக்குணம் உயிர்பெற்றுவளர்வது கல்சரின் மெய்ம்மையாற்றான்.

நாகரிகம் (Civilization) என்பது ஒருவனது நடையுடைபாவனை அல்லது ஒழுக்கத்தைச் சேர்ந்தது. இதுவும், வாய்மை நீதி அன்பு ஆண்மை முதலியவைகளைப் பாராட்டுவதுபோல் தோன்றும். இவைகளைப் பாராட்டப்புக்கதே இது என்பதைத்தா

னெண்ணி ஏங்கியேங்கி மனமழிந்திட வேண்டி வருகின்றது. இவைகளைப் பாராட்டப் புகுந்தபடியினால்தான் இன்று இவ்வுலகத்தில் வாய்மை நீதி முதலியன இத்துணை அரிதாகிவிட்டன. ஏனெனில், வாய்மை அன்பு நீதி ஆண்மை முதலியவைகளைத் தனித்தனியே மனிதனுடைய ஒழுக்கத்திற்கு ஆதாரமானவைகளாகக் கொள்ளத்தலைப்பட்டனர். எனின்,ஒரு மரத்தைக் கிளைகிளையாக வெட்டி வீட்டினது கூரையின்மேல் நிறுத்தி வளர்க்கமுயல்கின்ற விபரிதம் நிகழக் காண்கின்றோம். மற்றென்: குணம் என்னும் அம்மரம் சிதைந்துபோயிற்று; கிளைகளெல்லாம் உலர்ந்து விறகேயாயின. பொய்யும் வஞ்சனையும் பொறாமையும் குரூரமும் கள்ளும் கரவும் களவும் கவறும், கோலாகலமாய்நடமாடுகின்றன.இதனின்று மனிதர் தம் ஒழுக்கம் (Morals) கெட்டதென்று எண்ணிவிடுகின்றோம். அந்தரம் நோக்கில், குணம் குறைந்து வருகின்றது என்பதையே எண்ணல்வேண்டும். குணமுடையோர்செய்கையே ஒழுக்கம் என்பது அன்றி ஒழுக்கத்திற்கு வேறோரிருக்கை இல்லை. குணமுடையார் கள்ளுண்ணர், (உண்டாலுந் தீதில்லை); இது உண்மை; மற்று, கள்ளுண்ணுதார் எல்லாரும் குணமுடையோர் என்று கொள்ளல் நேரன்று. குணமுடையார் கள்ளுண்ணுமையுடன் செய்யத்தகாதன ஏனையவற்றையுஞ் செய்யமாட்டார். மற்று, கள்ளுண்ணுதான் ஒருவன், குணமில்லாதவனுயின், மதுவுண்டு இவன் மயங்கிக்கிடந்தாலாகாதா என்னும்படி,அந்த நேரத்திலும் அவலமே செய்து, தானும் அல்லல்பட்டுப் பிறரையும் அல்லல்படுத்துபவனுவான். நாகரிகம் இப்படி ஒழுக்கத்தைப் பற்றிக்கொண்டு குணத்தைப் போக்கிலேபோகவிட்டுவிடுகின்றது. இக்காலம் கண்டு கருத்தழியநிற்பது ஒழுக்கத்தின் குறைவன்று, உள்ளான குணத்தின் சிதைவேயாம். ஒழுக்கத்தை ஒன்றுகமதிப்பது பொருளல்லவற்றைப்பொருளாக்கொள்ளும் மருட்கையின்பாற்படும். ஆதலாற்முன், நாகரிகம் முதிர்ந்த இந்நாளில், மானுட வாழ்க்கைக்குப் பொருளும் பயனும் உளவோ என்னும் ஐயம்சுமந்த கேள்வி யெழுகின்றது. அக்கேள்வியைக் கண்டு மக்களும் கலங்குகின்றனர்.

நன்று: கல்சரின் அழிவே நாகரிகம் என்ன முழங்கிவருகின்றது. கல்சர் என்னும் அக்கருத்தை 'மரபு' என்னும் சொல்லால் இவ்விந்தியர் வழங்கிவந்தனர். மரபென்னும் அது ஒரு மாபெருஞ்சொல். அதற்கிருந்த ஆற்றல் எதற்குமில்லை. கல்சர்நிலைக் கெல்லாம், மக்கள்தம் குணத்திற்கெல்லாம், ஆதாரமாயிருந்தது அது. இக்கல்சர் அல்லது மரபு என்னுமிது வழிவழி இனத்தியல்பாய்த் தொடர்ந்துவருகின்ற உள்ளத்தினுண்மை நிலை. மரபானது ஒன்றையும் அறிந்துகொண்டதாகப் பாவிக்காது, ஆராய்ச்சியொன்றும் செய்யாது. இதுதான் மரபு என்பதல்லாமல் அதற்கு வேறோர்காரணமும் வேண்டா. "பிறரும் சான்றோர் சென்ற நெறியென ஆங்குப்பட்டன்று அவன்கை வண்மையே" என்று ஏணிச்சேரி முடமோசியார் ஆய்என்னும் வள்ளலைப் பாடியகாலத்து இதனையே வற்புறுத்தினர். இராமனோடு அரணியம்புகுந்த சீதையை, அத்திரிமுனிவரின் நன்மனையாட்டி அநசூயை, "நீ இம்மன்பாலித்துணைக் காதல் வைத்திருப்பதற்குக் காரணம் யாது" எனவினவ, சீதாபிராட்டி, "என் தந்தை ஜனகன் என்னை இராமனுக்கு மணஞ்செய்து தந்தனன், ஆதலால் காதலிக்கின்றேன்" என்று விளம்பிய செம்மையைக் கூறுகின்ற வான்மீக முனிவரும், கற்பென்னும் மரபே காதலென்னும் ஊக்கமாய் விளைகின்றமேன்மையை வற்புறுத்துகின்றார். இராமனுக்கின்றிப் பட்டம் பரதனுக்கே மன்னவன் அளித்தான் என்றசொல் கேட்டவுடன், "முறைமை அன்றென்பதொன்றுண்டு" என்ற அக்கோசலாதேவியும் மரபு கெடுவதோ என்னுமொரு எண்ணத்தையே முதலிற் கொண்டனள். மரபுடையோர் அறத்தினை அறிந்து நடத்தினர் என்பதின்றி அன்னவர்க்கு"அறிவெனப் படுவதே அறம்" என்றுகூறுவதே நேர். அதற்கெதிர் இக்காலநாகரிகத்தவர் "அறிவெனப்படுவதுஆற்றல்" எனக்கொண்டு அவலமாகின்றனர். இதுதான் அடிப்படையான வேற்றுமை; இதுவே அநர்த்தத்திற்கெல்லாம் காரணம்; அறமே அறிவு என்பது உண்மை, அறிவே ஆற்றல் என்ன ஆயினும் ஆகலாம்; மற்று இறுதியிலோ, கம்பருடைய கோசலத்திற்போல,ஆற்றல் நல்லறமல்லது இல்லாமல் ஆதல் வேண்டும். கல்சர்நிலையின் கருவூலம் அது. "என்னைக் கடந்து என்னிலும் மேலான தொன்றைச் செய்கின்றேன்" என்னும் இவ்வுற்சாகந்தான் வாழ்க்கைச் செல்வம்! மரபுடைய மாண்பு, செல்வவாழ்க்கை யென்றுது வாழ்க்கையே செல்வமெனும் அம்முழுமைநிலையிற் காணப்படும். வாழ்க்கையேசெல்வமென்னும் மரபுபோகிச் செல்வமுடைய வாழ்க்கைவேண்டுமென்னும் நினைவு தோன்றுவதே பொல்லாதவொரு நாகரிகத்தின் புன்மையாம். ஆகையாற்முன் எல்லாச் செல்வமும் இருந்தும், இவ்வாழ்க்கையில் நாம் எத்தைக் கண்டு இச்சைகொள்வோம் என்ற ஓர் கையறவு விளைகின்றது. எனின், செல்வவாழ்க்கைச்சிந்தனை என்கின்ற இந்த நாகரிகத்தைவிட்டு, வாழ்க்கைச்செல்வம்வேண்டுவோமாயின், அப்பொழுது, வாழ்க்கையைக் கண்டு, அவ்வாழ்க்கையையே இச்சைகொள்வோம்.

முன்னே உரைத்தபடி, நம்மைக் கடந்து நம்மினும் மேலானதொன்றைச் செய்கிற அவ்வுற்சாகமே வாழ்க்கைச்செல்வமாம் மரபு என்னநிற்கின்றதென்னின், அம்மரபினை மீண்டும் நாம் பெறமுயல்வதே முறை. இதனை இக்காலத்தில் நம்முடைய நினைவாகக் கொள்ளல்வேண்டும் எனக் கூறநேர்வதே சால வருந்தத்தக்கது. இக் கூற்றும் நாகரிகத்தின் ஒரு கோலமே என்னக் கூறினும் பிழையன்று. ஒரு மேன்மை இதயத்திலிருக்கும்வரையிற்முன் கல்சரினது கைகளில் வளர்கின்றோம். அதுவே, புத்தியின் ஆராய்ச்சிக்கு இலக்காகிக் கசக்குண்டு வாயின்வழியாய் வடிகின்றபோது மீண்டும் நடலைவாழ்விற்கே பின்பாட்டாக முடியும். ஏனெனில் வாய்ப்பேச்சைக் காதுகளே கேட்கும்; கேட்டகாது மீண்டும் அதனை வாயா லுமிழ்ந்துவிடும், அவ்வளவே. நம் நாகரிகத்தின் நடமாட்டமெல்லாம் இதற்குமேல் [illegible] னும்அதுவோ இதயத்தின் [illegible] சக்தி. அது நம்மு[illegible] வாழ்க்கையை நடத்த

199193

m 241, n 28 K.N

வேண்டுமானல் இதயத்தாலேயேநேராக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதயமும் இதயமும் தம் வதந்தியைத் தெரிவித்துக்கொள்கின்ற மொழியும் அதன் இலக்கணமும் முற்றிலும் வேறு. அப்பாஷை அறிந்தவர் கலையின் உணர்வினுற் சான்ற புலமையோரே. அன்னுர் மொழியொடு பழகுவதன்றி அம்மரபு நம்முடைய இதயத்துள் இறங்குமாறு வேறில்லை.இயம்பாமல் இயம்புகின்ற இதயத்தினேர் அவர். அவர் மொழிகளினின்று இம்மரபு வாராததுபோல் வந்து நம்பால் தங்கிவிடும்.

இம்மரபின் மேன்மை எளிதில் எடுத்துரைக்குந் தன்மைத்தன்று. மரபின்படி வாழ்கின்ற வாழ்க்கையின் இனிமையை உன்னவுன்ன உவகைபெருகும். இக்காலத்தில்,தோன்முத்துணையாய் நிற்கும் நிலைமையதாகிய மரபினைமானுடவாழ்க்கையோடு இணைத்து வைக்க முயல்கின்றவர்களே உலகத்திற்கு உண்மையான உதவி செய்கின்றவர்கள் ஆகின்றார் என்பதை உணர்வோமாயின் அப்பொழுதே உய்யும் நெறியை உற்றடைந்துவிட்டோம் என்ன நிச்சயமாக எண்ணலாம். மற்றவொன்றும் வீரமன்று, விதியன்று, மெய்ம்மையின் வாரமும் அன்று. மரபு கெட்டு அறிவு வளர்கின்ற இக்காலத்தின் கோலாகலத்தை ஆங்கில ஆசிரியர் ஒருவர் நுண்ணிதின் ஆராய்ந்து பின்வருமாறெழுதியிருக்கின்றார்.

In this process of decay two creative phenomena appear; academic scholars whose science loses all fertilising touch with life, and popularizers who make pleasing to the public a science that has already been abandoned in the laboratories and the schools. Science and philosophy become an esoteric religion, with professors as priests, and the doctor's degree as ordination. Necessarily a group of writers appears who try to bridge this gap between expert and layman; but the "compendium-literature" which they write is **therefore** a sign of decay. Through the influence of these writers a reaction comes against metaphysics; Positivism, which is utilitarianism in philosophy, indicates the victory of the bourgeoise in the realm of thought. Ethics replaces metaphysics; alcohal-questions and vegetarianism are treated with religious earnestness; practical living becomes the center of consideration, and the passion of pure thought sinks down. Zeno the stoic replaces Aristotle, Schopenhauer replaces Kant. The age of great systems is gone; scepticism has undermined the courage to do great things. Schopenhauer's pessimism and doubt are the natural philosophy of the "Civilization"; and though romanticism and despairing hope lift their heads again in Nietzche, the mood of Schopenhauer triumphs, and a hopeless darkness settles down upon the western mind. Knowledge has lost its pride; it returns to Socrates, and confesses that it knows nothing; it returns to Protagoras, and admits that just because man is the measure of all things, all truths are relative, true only for a given mind at a given moving point in space and time. Einstein means **finis**; it will be impossbile for men to take themselves seriously again. Life itself becomes problematical; men write on "Is life worth living." Some Philistines will make a religion of progress, and soothe hearts grown empty through the loss of paradise, by talking of the accumulation and transmission of culture. But culture cannot be transmitted, it has to grow on the spot; it cannot be given to the mind, it must be rooted in the soul; it is indigenous and unique; it is impossible to transfer gothic architecture, or attic drama, or the art of the fugue, to alien soil; a culture cannot be exported. What is transferable is the civilization. i.e. not culture but tools, techincal methods and equipment, the external dress and fashions of life and mind; but this is not progress, it is only change. Mankind has no aim no plan, anymore than the family of butterflies or orchids. The history of humanity has no meaning whatever; deep significances reside only in the life-courses of separate cultures. And that being so, no philosophy in the grand style is possible to us any more; nothing is left us but the vain scepticism, the pyrrhonism of the Alexandrian age. Perhaps this present "unphilosophical philosophy' is the last that Western Europe will know.

நம்முடைய மரபாகி நமது ஆன்மாவிலேயே வேரூன்றி வளர்கின்ற கல்சரை விட்டுவிட்டு "முன்னேற்றங்கள்" அடைய முயல்கின்ற அவலத்தை இவ்வாசகங்கள் எடுத்துக்காட்டியிருக்கும் நுண்மையை அறிந்துகொள்ளமாட்டாமல் பேசப்படுகின்ற சீர்திருத்தப் பேச்சுக்களை நல்லுணர்வுடையோர் கேட்டு எவ்வாறுதான் பொறுத்திருக்கின்றார்களோ எமக்குத் தெரியவில்லை.

தமிழ்ப்பாடம் 143.

நைடதம்—நளன் தூதுப் படலம்

[661-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னண மணங்க னுரு
மாயமு மிரங்க னேக்கி
மன்னனு மறிவு தீர்ந்து
மனஞ்சிறி தயரும் வேலைப்
பொன்னிறப் பவளச் செவ்வாய்ப்
பொற்புறு பசிய மென்கூட்
டன்னமும் விசும்பி னீங்கி
யவ்வழி யடைந்த தன்றே. 74

உரை:—இன்னணம்-இன்னபடி, அணங்கு அன்னுளும் - இலக்குமிபோன்ற தமயந்தியும், ஆயமும்-அவள் தோழிமார்களும், இரங்கல் நோக்கி - வருந்துவதைப் பார்த்து, மன்னனும் - நளமகாராஜனும்,

அறிவு தீர்ந்து - அறிவு நீங்கி, மனம் சிறிது அயரும் வேலே - மனம் சிறிது சோர்கிற சமயத்தில், பொன் நிறம் - பொன்நிறமுடையதும், பவளம் செவ்வாய்-பவளம்போன்ற சிவந்த வாயையுடையதும், பொற்பு உறு - அழகுபொருந்திய, பசிய - பசுமையான, மெல் - மெல்லிய, சூட்டு - உச்சிக்கொண்டையை உடையதும் ஆன, அன்னமும் - அன்னப்பறவையும், விசும்பின் நீங்கி - ஆகாயத்தை விட்டு வந்து, அவ் வழி - அந்த இடத்தில், அடைந்தது-சேர்ந்தது —அன்றே - அசை.

குறிப்பு :—நிறம் + பவளம் = நிறப்பவளம் :—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகையால் நிலைமொழி யீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. ( ).

பவளம் + செவ்வாய் = பவளச்செவ்வாய்:—உவமத் தொகையாகையால் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தது ( ).

விசும்பின் என்பதிலுள்ள, இன், ஐந்தாம் வேற்றுமை உருபு. நீங்கல் பொருளில் வந்திருக்கின்றது. ( ).

எய்திய தூவி யன்ன
மின்னகைப் பவளச் செவ்வாய்
மையவாங் கரிய கூந்தல்
வாண்முக மினிது நோக்கி
நெய்தவழ் புலவு வைவே
னிடதர்கோ னிவனே யுள்ளத்
தையுறேல் கமலப் போதி
லணங்கிற்கு மணங்கு போல்வாய். 75

உரை:—எய்திய - வந்த அந்த, தூவி - இறகுகளையுடைய, அன்னம் - அன்னமானது, மின்-பிரகாசம் பொருந்திய, நகை - பற்களேயும், பவளம் - பவளம் போன்ற, செவ்வாய் - சிவந்த வாயையும், மையவும் - மையைப்போன்ற, கரிய கூந்தல் - கருமையான கூந்தலையுமுடைய தமயந்தியின், வாள் முகம்-ஒளிபொருந்திய முகத்தை, இனிது நோக்கி - இனிமையாகப் பார்த்து—"கமலம் போதில் - தாமரைமலரில் இருக்கின்ற, அணங்கிற்கும் - திருமகளுக்கும், அணங்கு போல்வாய் - திருமகள்போன்ற தமயந்தியே, நெய் தவழ் - கொழுப்பு வழிகின்ற, புலவு - புலால் நாற்றம் உடைய, வை-கூரிய, வேல்-வேலாயுதத்தையுடைய, நிடதர்கோன் - நிடதருக்கு அரசனான நளன், இவனே - இவன்தான், உள்ளத்து - உன்மனத்தில், ஐயுறேல்-சந்தேகப்படவேண்டா, (என்று பின்னும் சொல்லும்).

குறிப்பு:—அன்னம் + மின்னகை:—எந்தத்தொடராயிருப்பினும், வருமொழிமுதலில் மெல்லினமெய் வருமாயின் நிலைமொழியீற்று மகரமெய் கெடுமாகையால், அன்னமின்னகை எனப் புணர்ந்தது. ( ).

கமலம் + போது = கமலப்போது:—கமலமாகியபோது எனவிரியும் இது இருபெயரொட்டுப் பண்புத் தொகை யாகையால், நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது ( ).

தவழ் + புலவு = தவழ் புலவு:—இது வினைத்தொகையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை ( ).

கரியகூந்தல்:—இது குறிப்புப் பெயரெச்சத்தொடர், ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. கூந்தல், என்பது இங்குக் கூந்தலையுடைய தமயந்தி என்று பொருள்படுகின்றதானாலும், கரியகூந்தல் என்பதை அன்மொழித் தொகையென்று கொள்ளலாகாது. அன்மொழித்தொகை எப்பொழுதும் ஒரு தொகைநிலைத்தொடருக்குப் புறத்தேயே பிறக்கும். 'கரிய கூந்தல்' என்பது பெயரெச்சத் தொடராகையால் தொகாநிலைத்தொடர். ஆகையால் 'கரிய கூந்தல்' என்பதை (உடைய தமயந்தி என்னும் சொற்கள் அதன்புறத்தே தொக்கு இருப்பதுபோல் தோன்றினும்) அன்மொழித்தொகை என்பதற்கில்லை. கூந்தல், என்பதைத் தனியாக எடுத்து அது, கூந்தலையுடைய தமயந்திக்கு ஆவதால், சினையாகுபெயர் என்று கொள்ளவேண்டும் ( ).

மழைமதர் நெடுங்கட் செவ்வாய்
வளர்முலை மடந்தாய் நின்மேல்
விழைவிகந் துரைத்தா னல்லன்
விண்ணவர்க் கியைந்த மாற்றம்
பழுதுறு மென்னு மாற்றாற்
பகர்ந்தனன் பரிதி வேலா
னழுதகங் குழைந்தி டேலென்
றன்பினு லறைந்த தன்றே. 76

உரை:—மழை - மேகம்போன்றதும், மதர் - களிப்புடையதும் ஆன, நெடும் - பெரிய, கண்-கண்களையும், செவ்வாய்-சிவந்த வாயையும், வளர்முலை-பூரிக்கின்ற முலைகளையும் உடைய, மடந்தாய்- பெண்ணே! —நின்மேல் - உன்னிடத்து, விழைவு இகந்து-ஆசையைவிட்டு, பரிதி வேலான் - சூரியனைப்போன்ற வேலாயுதத்தையுடைய இந்நளன், உரைத்தான் அல்லன் - உரைத்தவன் அல்லன், விண்ணவர்க்கு - தேவர்களுக்கு, இயைந்த-உடன்பட்ட, மாற்றம்-வார்த்தை, பழுதுஉறும் என்னும்ஆற்றால்-தவறிவிடும் என்றபடியினால், பகர்ந்தனன் - இவ்வாறு தூதுசொன்னான், (ஆகையால்), அழுது - நீ அழுது, அகம் குழைந்து இடேல் - மனம் உளையவேண்டா, என்று - என்று, அன்பினால் - அன்பினோடு, அறைந்தது - அன்னம் கூறியது. (அன்றே - அசை.)

வடுவகிரனையவுண்கண்மடந்தையோடிவ்வாறோதிக்
கடகளி றென்ன நின்ற காளைதன் முகத்தை நோக்கா
வுடையபே ரறிவாற் காம முள்ளமைத் தின்ன கூறிற்
கொடிநெடுந்தானைவேந்தேகோற்றொடியாற்றுங்
[கொல்லோ

உரை:—வடுவகிர் அனைய - மாவடுவின் பிளவைப் போன்றதும், உண் - மையிட்டதும் ஆன, கண் - கண்களையுடைய, மடந்தையோடு - தமயந்தியினிடத்தில், இவ்வாறு ஓதி - இப்படிச்சொல்லி,(பிறகு) கடகளிறு என்ன - மதயானைபோல், நின்ற - நின்ற, காளைதன் - காளைபோன்ற அந் நளமகாராஜனுடைய, முகத்தை நோக்கா - முகத்தைப் பார்த்து, "உடைய பேர் அறிவால் - உனக்கிருக்கின்ற பெரிய அறிவினால், காமம் - காதலை, உள் அமைத்து- உள்ளே அடக்கிக்கொண்டு, இன்ன கூறில் - இப்படி இவள் தேவர்களை மணக்க வேண்டுமென்று நீ தூதுபேசினால், கொடி-கொடிகளையுடைய, நெடும்-பெரிய, தானை-சைந்நியத்தையுடைய, வேந்தே - அரசனே, கோல்தொடி - அழகிய வளையல் களையணிந்த தமயந்தி, ஆற்றும் கொல்லோ-பொறுப்பாளோ.

குறிப்பு:—நோக்கா—என்பது எதிர்மறை உருவத்திலிருந்தாலும், உடன்பாட்டுப் பொருளில் வந்த வினையெச்சம் ( ).

மாங்குயிற் குதலைப் பேதை
மனமுநீ யியைந்த வண்ணம்
தீங்கற வுரைத்த வாறுந்
தேவர்மற் றுணரா ரல்ல
ரீங்கினி யுரைப்ப தென்னை
யிவ்வயி னிகழ்ந்த வெல்லா
மாங்கவர் தம்பா லேகி
யறைதியென் றறைந்த தன்னம். 78

உரை:—மாங்குயில் - மாமரத்திலுள்ள குயிலைப் போன்ற, குதலை - குதலைச் சொற்களைப் பேசுகின்ற, பேதை - பேதையாகிய இந்தத் தமயந்தியின், மனமும் - கருத்தும், இயைந்த வண்ணம் - உடன்பட்டபடி, நீ - நீ, தீங்கு அற - குற்றம் இல்லாமல், உரைத்த வாறும் - சொன்னவிதத்தையும், தேவர் - தேவர்கள், (மற்று - அசை) உணரார் அல்லர் - அறியாதவர்கள் அல்லர். ஈங்கு இனி உரைப்பது என்னை - இனிமேல் இங்கு நீ சொல்வதற்கு என்ன இருக்கின்றது. இவ்வயின் - இவ்விடத்தில், நிகழ்ந்த எல்லாம் - நிகழ்ந்தவைகளையெல்லாம், ஆங்கு-அங்கே, அவர் தம்பால் - அத்தேவர்களிடம், ஏகி-சென்று, அறைதி-சொல்," என்று - என்று, அன்னம் - அவ்வன்னப் பறவை, அறைந்தது - கூறியது.

அவ்வுரை கேட்ட லோடு
மடையலர்ச் செருக்கும் வேலான்
மவ்வலங் குழலி னுடன்
மனவலி யினிதி னோர்ந்து
செவ்விதின் மனமுங் கண்ணுந்
தெரிவைமேற் கிடப்ப மாறுக்
கவ்வைகொள் வாயி னீங்கி
விஞ்சையிற் கரந்து போனான். 79

உரை:—அவ்வுரை - அன்னம் சொல்லிய அந்த வார்த்தையை, கேட்டலோடும்-கேட்டபிறகு, அடையலர் - பகைவர்களை, செருக்கும் - அழிக்கின்ற, வேலான் - வேலாயுதத்தையுடைய நளன், மவ்வல் அம் குழலினாள் தன் - வனமல்லிமலரை யணிந்த அழகிய கூந்தலையுடைய தமயந்தியின், மனம்வலி-மனத்தின் உறுதியை, இனிதின் - இனிமையாக, ஓர்ந்து - தெரிந்துகொண்டு, செவ்விதின் - செம்மையாக, மனமும் கண்ணும் - தன் மனமும் கண்ணும், தெரிவைமேல் - தமயந்தியின்மேல், கிடப்ப - தங்கியிருக்க, மாறு - நீங்காத, கவ்வைகொள் - ஒலியையுடைய, வாயில் நீங்கி - வாயிலைவிட்டு, விஞ்சையில் - மந்திரத்தினால், கரந்துபோனான் - மறைந்து சென்றான்.

குறிப்பு:—அடையலர்ச் செருக்கும்: — இது இரண்டாம்வேற்றுமைத் தொகையாயினும் எழுவாய்த் தொடரோடுமயங்கக்கூடுமாகையால்அம்மயக்கத்தை நீக்கும்பொருட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. ( )

காரிகை யுளமு நாணுங் கவர்ந்தனன் கரந்து போய
மூரிவெஞ் சிலைக்கை வீரன் கடவுளர் முன்ன ரேகி
நேரிழை தன்பாற் றூது போயபி னிகழ்ந்த வெல்லாஞ்
சோர்வுறா துரைத்தான் றேவர் தோன்றல்பான்
[மகிழ்ச்சி கூர்ந்தார். 80

உரை:—காரிகை-தமயந்தியின், உளமும்நாணும்-மனத்தையும்நாணத்தையும், கவர்ந்தனன்-கவர்ந்தவனாகி, கரந்துபோய - மறைந்துபோன, மூரி - வலிமையமைந்த, வெம்-கொடிய, சிலை - வில்லையேந்திய, கை-கையையுடைய, வீரன் - வீரனாகிய நளன், கடவுளர் முன்னர் ஏகி-தேவர்களுக்கு முன் சென்று, நேரிழை தன்பால் - நேரான ஆபரணங்களை யணிந்த தமயந்தியினிடத்தில், தூது போயபின் - தூது போனபிறகு, நிகழ்ந்த எல்லாம்-நிகழ்ந்தவைகளை எல்லாம், சோர்வு உறாது - தளராமல், உரைத்தான் - சொல்லினான் ; தேவர்-தேவர்களும், தோன்றல்பால்-நளனிடத்தில், மகிழ்ச்சி கூர்ந்தார் - மகிழ்ச்சியடைந்தார்.

குறிப்பு:—இதனுடன் நாம் நைடதத்தில் பாடத்திற் கெடுத்துக்கொண்ட பாகம் முடிகின்றது. இனி இவ்வாண்டில் வரவிருக்கும் இதழ்களில் புணரிலக்கணத்தில் எஞ்சியிருக்கும் விதிகளைக் கூறி முடிப்போம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—7. வாலிவதைப் படலம்

[665வது பக்கத் தொடர்ச்சி]

கடவுளே யல்லா லிடர்கடப் பாரோ

கல்வி கேள்விகளினால் இளகாமல், எண்ணத்தால் மாத்திரம் இறுகியிருந்த இதயமுடைய வொரு சுக்கிரீவனது தன்மையைக் கம்பர் அவ்வண்ணம் காட்டினார். வான்மீக முனிவர் தம் சுக்கிரீவனுக்கு எண்ணத்தின் இயக்கமுந் தந்திலர் ஆதலின் அதற்கேற்றவாறு அவனுடைய சித்திரத்தை உண்மையுறவே தீட்டியிருக்கின்ற திறமையும் ஒருங்கே பாராட்டத்தக்கது. கம்பர் நூலில் இவன், தனது உள்ளத்தே ஏதேனும் உளதோ இலதோ என்று தோற்றுவகை வாளாநின்றிருந்த இந்நிலைக்கு மாறாக, முன் வான்மீகத்தில், இறந்துகிடந்த தன் தமையனையும் அவனைத் தழுவிப் புலம்புந் தாரையையுங் கண்டு ஆற்றாத் துன்பமுடையவனாய் இராமபிரானைநோக்கிப் பின்வருமாறு கதறியுளன்:—

"நரேந்திர, உமது சொல்லை நீர் நிறைவேற்றிவிட்டீர். எளியேன் நான் இன்றுதொட்டு உலகசுகங்களெல்லாவற்றையும்நீக்கிவிடுகின்றேன். இந்த வானரர்கோமகள் இவ்வாறு அழவும், அரசனிறந்தமையால் குடிகளும் பரிவாரங்களும் புலம்பவும், அரசாள்வதற்கு எவ்வாறு என்மனம் ஏவப்படும்? நான் அடைந்த அவமானத்தால் வந்த பகைமையுங் கோபமுங் காரணமாக நான் முன்பு எனது தமையனைக் கொல்ல விரும்பினேன். அந்த வானரர்கோமகன் இறந்தபின்னர் நான் இப்போது மிகவும்பச்சாத்தாபப்படுகின்றேன். வாலியைக் கொன்று வானுலகைப் பெறுவதிலும் இரிசியமூக பர்வதத்திலேயே எவ்வாறாவது சீவனஞ்செய்து எந்நாளும் வசிப்பது எனக்கு நலமெனப்புலப்படுகின்றது. "நீ எங்கேயாவது திரிந்துகொண்டு உயிரோடு இரு; உன்னைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை" என்று இப்பெருந்தகைமை யுடையவன் எனக்குச் சொன்னான். அந்தச்சொல் அவனுக்கே தகும்.இந்தச்சொல்லும் இந்தச் செய்கையும் பாவியாகிய எனக்கே பொருந்தும். இராச்சியத்தையடைவதால் வருமின்பத்தைப் பெருந்தகைமையுடைய சகோதரனைக் கொல்லுவதனால் வருந்துன்பத்தோடொத்திடுவானாயின் எவன்தான், எவ்வளவு பேராசையுடையோனாயினும், தன் சகோதரனைக் கொல்ல விரும்புவான்? வாலி தன்பெருந்தகைமைக்கேற்க என்னைக்கொல்லவிரும்பவில்லை; நான்என் இழிதகைமையினால் சகோதரனைக்கொன்று பெரும்பாவ மியற்றினேன். நான் மரக்கிளைகளால் அடியுண்டு கதறி யோடும்போது 'இவ்வாறு செய்யாதே' என்று அவன் என்னைத்தேற்றி, எப்போதும் தனது சகோதர வாஞ்சையையும், பெருந்தகைமையையும், தருமத்தையும் அழியாதுபாதுகாத்தான்; நான் அதற்குமாறாக என்கோபத்தையும், காமத்தையும், குரங்குத் தன்மையையும் காட்டிவிட்டேன். அன்ப, தேவேந்திரன் விசுவரூபனைக்கொன்று பாபம்புரிந்ததுபோல, நான் என் தமையனைக்கொன்றுநினைத்தற்கரியதும், நீக்கத்தக்கதும், விரும்பவொண்ணாததும், காணமுடியாததுமான இந்தப் பாவத்தைத் தேடிக்கொண்டேன். இந்திரனுடையபாவத்தில் பூமியும்நீரும் மரங்களும்பெண்களும் பங்குபற்றினார்கள்; மற்று,இந்தக் குரங்கின்பாபத்தில் பங்குபற்றவிரும்புவர் யார்? தகுதியில்லாததும் தருமமல்லாததும் குலநாசத்தைவருவிப்பதுமாகிய இச்செயலைப்புரிந்தநான் குடிகள் செய்யும் வழிபாட்டிற்கும் இளவரசுப்பதவிக்கும் அருகனல்லேன்; அங்ஙனமாயின் ராஜபதவிக் கருகனாவேனோ? பெரும் பழியைத் தருவதும் உலகத்தாரால் நிந்திக்கப்படுவதுமான கொடும்பாபத்தை நான் செய்துவிட்டேன். பள்ளத்தை நோக்கி ஓடும் மழைவெள்ளம்போல, இப்பெருந்துக்கம் என்னைமீதூர்ந்து செல்கின்றது. தமையன்கொலை என்னும் வாலையும் பின்புறத்தையும், பரிதாபமென்னும் துதிக்கை, தலை, கண், தந்தங்களையும்உடைய இந்தப்பெரியமதயானை, ஆற்றின்கரையை இடிப்பதுபோல்,என்னை இடிக்கின்றது. நெருப்பிலிட்டிருக்கும் பொன்னிலிருந்து மாசு கழியுமாறுபோல, இப்பொறுத்தற்கரிய பாபத்தைச் செய்தஎன்னிடமிருந்து நல்லெண்ணங்களெல்லாம் நீங்கிவிடுகின்றன. இந்த வலிய வானரவீரர்களும் அங்கதனும் துன்பத்தினால் பாதிஉயிர் போனவர்கள்போல் காணப்படுகின்றார்கள்.நற்குணநற்செய்கைகளையுடைய புதல்வனைப் பெறுதலரிது. இவ்வங்கதனுக்கு நிகரான ஒருபிள்ளையை எங்கேகாணலாம்? வீர, நான் என் அண்ணனைக் காணக்கூடியநாடு எங்குமில்லையே. அங்கதன் இன்றுஇறந்துவிடுவான்போலும்; இறவாது பிழைப்பானாயின் அவனைவளர்ப்பதற்கு அவனது தாயும் பிழைத்திருக்க வேண்டும். தன் குமாரனையின்றி அவள் ஒருகாலும் உயிரோடிருக்கமாட்டாள். ஆதலால் நான் என் தமையனையும் அவன் குமாரனையும் சேர்வதுகாரணமாக இத்தீயில் வீழ்ந்திறப்பேன். இந்தவானரவீரர்கள் உமதாணையின்படிசீதையைத்தேடித் தருவார்கள். நானிறந்தபின்னும் இவர்கள்உமது கட்டளையின்படி நடப்பார்கள். ஆதலால், கொடும்பாபியும், என் குலத்தை நாசஞ்செய்தவனும், இவ்வுலகில் வாழ்வதற்கு யோக்கியனல்லாதவனுமாகிய நான் தீயிற்குதித்தற்கு உத்தரவு தாரும்" என்று கேட்டான்.

சுக்கிரீவனைக் கொன்றே தீர்வதென்னும் நினைவு வான்மீகத்தின்படி வாலிக்கிருந்ததில்லைஎன்பது இதனாலும் வற்புறுத்தப் பெறுகின்றது. ஆதலின் சுக்கிரீவன் அவ்வாலியைக் கொல்வித்ததன்கொடுமை பின்னுமொருபடி மிகுந்துதோன்றும்.எனினும், கழிவிரக்கத்தினால் கதறும் இச்சொற்கள் சுக்கிரீவனை அதிகமும் தூய்மை நனி செய்துவிடுகின்றன. தன் இனத்து வானரர்களும், வாலிக்கு அண்மியராயிருப்பவரும், தாரை அங்கதன் முதலாயினோரும், தன்னை நற்குணமுடையவனென மதித்துப் பாராட்டுமாறு பொய்யே இம் முதலைக்கண்ணீர் வடிக்கின்றானோ இவ்வொரு சுக்கிரீவன் என அவனுக்குப் பிழை யிழைத்தல் அழகன்று. பொய்யாயின், "நெருப்பிலிட்டிருக்கும் பொன்னிலிருந்து மாசுகழியுறுமாறுபோல, இப்பொறுத்தற்கரியபாபத்தைச்செய்த என்னிடமிருந்து நல்லெண்ணங்களெல்லாம் நீங்கிவிடுகின்றன" என்ன அவ்வுவமையைப் பொருந்தாவகை புகுத்தியிருக்கமாட்டான். நல்லெண்ணங்களை மாசு என்றும் அது இப்பொழுது தன்னைவிட்டு நீங்கிவிடுகின்றன வென்றும் கூறும்படி ஒருஉவமையால் வஞ்சிக்கப்படுகின்றவொருவன் பொய்வேட பாவனைகாட்டி நடிப்பவனாதல் இயற்கையன்று. பேசுவது பொய்யாயின் அதனிடையில் இவ்வகைப் பேதைமை தவழ்தலோ அருமை. உண்மையாய துன்பத்தால் உழல்கின்ற உள்ளமே பிழைபட்ட உவமங்களைப் பிறப்பிக்கும். அன்றியும், வாலி தன்னைக் கொல்லநினைத்திலா அவ்வொரு பெருந்தன்மையை இந்நிலையில் வஞ்சனையுடையவொரு வானரம் வற்புறுத்திக் காட்டாது.

இது இடைப்பிறவரல் : தன்தம்பியை அவன் சுற்றத்தோடும் இராமனுக்கு அடைக்கலமாக்கியபின் வாலி, சுக்கிரீவனை நோக்கி, "உன் மகனை வல்லைகொணர்தி" என்ன, அங்கதனும் வந்து, இரத்தக்கடலில் கிடந்த தாதையைக்கண்டு, சந்திரன்மீதோர் தாரகை வீழ்ந்ததென வீழ்ந்து புலம்பலானான்—

எந்தையே யெந்தை யேயிவ்
வெழுதிரை வளாகத் தியார்க்குஞ்
சிந்தையாற் செய்கை யாலோர்
தீவினை செய்தி லாதாய்
நொந்தனை யதுதா னிற்க
நின்முக நோக்கிக் கூற்றம்
வந்ததே யன்றோ வஞ்சா
தாரதன் வலியைத் தீர்ப்பார்.

[என் தந்தையே, என் தந்தையே! ஏழு கடல்களால் சூழ்ந்த இந்நிலவுலகத்துள் எவருக்கும் மனத்தினாலேனும் செய்கையாலேனும் எவ்வகைத் தீங்கும்இழைக்காதவனே. நீயோ இவ்வாறு துன்பமடைந்தாய். அதுகிடக்க: உன்னுடைய முகத்தைப் பார்த்தும் யமன் பயப்படாமல் வந்தது அன்றோ! அதன் வலியைத் தடுக்கவல்லவரினி யாருளர்.]

வாலி தான் யாதும் குற்றம் செய்தானென்னும் பெற்றியை எங்கும் பேசாமைபோன்றே அங்கதனும் அவனுடைய தூய்மைக்குக் கூறுமிச் சான்று கருத்துட்கொள்ளத்தக்கது. பின்னர் தாரை புலம்பலினும் (வான்மீகத்திற்கு மாறாக) வாலிக்குப் பழி யாதும் இருந்ததெனப் புகலாமையும் இக்கருத்திற்கு உதவி செய்யும்.

வாலி வீழ்ந்தான் என்றதை அறிந்தவுடன், இராவணன் வாழ்ந்தான் என்றநினைவே அங்கதன் மனத்தின்கண் முதலில் வருகின்றது—

தறையடித் தனதுபோற் றீராத்
தகையவித் திசைக டாங்குங்
கறையடிக் கழிவு செய்த
கண்டக னெஞ்ச முன்றன்
நிறையடிக் கோல வாலி
னிலைமையை யுன்னுந் தோறும்
பறையடிக் கின்ற தந்தப்
பயமறப் பறந்த தன்றே

[தறையாணி அடித்து வைத்ததுபோல் இடம்விட்டுப் பெயராத தன்மையுடையனவாக இருந்த எட்டுத் திக்குக்களையுந் தாங்குகின்றயானைகளுக்குத் தோல்வியைச்செய்த கொடிய இராவணனது நெஞ்சம், உன் பருத்த அடியையுடைய அழகிய வாலின் தன்மையை நினைக்கும் பொழுதெல்லாம் பறையடிப்பதுபோல் படபடவென்று துடிக்கின்ற அந்தப் பயம் இனி அடியுடன் நீங்கிவிட்டதன்றோ.]

என வருந்துவான். வாலியின்மாள்கை இவ்வகை இராவணற்கு இலாபமாயிற்றென்னின், நட்டமே உற்றவரும் பிறர் உளர். அவர்களை நினைத்து,

குலவரை நேமிக் குன்ற
மென்றவா னுயர்ந்த கோட்டின்
தலைகளு நின்பொற் றோளிற்
றழும்பினித் தவிர்ந்த வன்றே
மலைகொளு மரவு மற்று
மதியமும் பலவுந் தாங்கி
யலைகடல் கடைய வேண்டி
னாரினிக் கடைவ ரையா

[ஐயனே, குலபர்வதங்களென்றும் சக்ரவாளகிரியென்றும் பெயர்பெற்றுள்ள ஆகாயத்தை அளாவிய மலைகளின் சிகரங்களும் இனி உன் அழகிய பாதங்களின் சுவடு நீங்கின அன்றோ! மந்தரமலையையும், கடைகயிறாகக் கொண்ட வாசுகி என்னும் பாம்பையும், சந்திரனையும், மற்ற உபகரணங்களையும் கொண்டு தேவர்கள் அலைகின்ற பாற்கடலைக் கடையவேண்டினால், இனி யார் கடைந்து உதவ வல்லவர்.]

என இரங்குவான். வாலியின் ஆற்றலுக்கும் வண்மைக்கும் இவையிரண்டும் மிகப் பெரிய சான்றாகளாய் நிற்றலாற்றான் இந்நன்மைந்தன், இவைகளையே மீண்டும், தூதனாய்ச் சென்றபோது 'நீயாவன்' எனக் கேட்ட இராவணனுக்கு, [றன்னைச்
இந்திரன் செம்மல் பண்டோ ரிராவண னென்பான்
சுந்தரத்தோள்களோடும் வாலிடைத் தூங்கச்சுற்றிச்
சிந்துரக் கிரிக டாவித் திரிந்தனன் றேவ ருண்ண
மந்தரக்கிரியால் வேலைகலக்கினான்மைந்தனென்றான்.

பாற்கடல்கடைந்த இந்தச் செய்தியை முன் வாலி தாரைக்குத் தானே செப்பியபொழுது, தன்னுடைய ஆற்றலுக்கே அதனைச் சான்றாகச்செப்பினான். கடைந்தெடுத்த அமுதத்தில் தானோர் துளி பருகலும் கூடுமென்பதை நினைக்கவும் நினைக்காமல் அத்தனையும் அமரர்க்கே அளித்துவிட்ட ஒருதனிப் பெருமையை அவ்வளல் உணர்வதெங்ஙனம். அங்கதனே அதனையறிந்து,

பஞ்சிமெல் லடியாள் பாகன் பாதுக மல்ல யாவு
மஞ்சலித் தறியாச் செங்கை யாணையா யமரர் யாரு
மெஞ்சலிருந்தாருன்னின்னமுதீந்தநீயோ [லார்
துஞ்சினைவள்ளியோர்கணின்னின்யார்சொல்லற்பா ·

[பஞ்சுபோன்ற மெல்லிய பாதங்களையுடைய பார்வதி தேவியைத் தன் இடப்பாகத்தில் வைத்த சிவபிரானது பாதுகைகள் அல்லாமல் மற்றொன்றையுங் கும்பிட்டு அறியாதசிவந்தகைகளால் உன் ஆணையைச்செலுத்தினவனே, நீ அமுதங்கடைந்து கொடுத்ததால் தேவர்கள் எல்லாரும் இறவாதவரா யிருக்கின்றார். மற்று, அமிர்தத்தை அவர்களுக்குக்கொடுத்த நீயோ, அதனிற்சிறிது உண்டிராததால் இறக்கின்றாய். ஆதலின், உன்னைப்போல் வண்மையுள்ளவர்கள் என்று வேறு சொல்லத்தக்கவர் யாருளர்.]

என்று பாராட்டுவானானான். வாலியின்பெருமையோ மிக வுயர்ந்தது; அதற்குநிகர் வேறு இல்லை யென்று அவன்மைந்தன் பாராட்டியதும் இயற்கையே. எனினும், சிந்தாதேவி தந்த வொரு மாபெரும் பாத்திரங் கொண்டு வேண்டியோர்க்குவேண்டியாங்கு ஈத்துவந்த ஆபுத்திரன் என்பான், மணிபல்லவத்திடை தனிவிடப்பட்ட நாள், அங்கு வாழ்வோர் யாவருமின்மையின், பிறர்க்குப் பயன்படுதலின்றி அப்பாத்திரத்தினின்று தானே யெடுத்தெடுத்து உண்டிருந்து வாழ்வதற்கு இசையானாகி, " மன்னுயிரோம்பும் இம்மாபெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேன்" என்று கோமுகி யென்னும் ஏரியில் அதனை எறிந்துவிட்டு, உண்ணாநோன்பொடு தன்னுயிர் துறந்தானும் ஒருவன் உளன், என்னும் சரிதத்தை அங்கதன் அறிதற்கு இயன்றதாயின், அன்றுதான்உண்ணாமற்கொடுத்ததால் இன்று கொல்லப்பட்ட தன் அருமைத் தந்தையைப் பிற்றைநாள் கைகுலுக்கி வானுலகத்துள் அழைத்துக்கொள்ள, கொடுப்பதன்றி உண்ண இசையாமல் உயிர்நீத்த வள்ளியோன் ஒருவன் வருவான் என்னுஞ் செய்தியையுஞ் சாற்றியிருப்பான்.

தன் இன்னுயிர்த் தந்தையின்மார்பின்மேல் விழுந்து புலம்புகின்ற இந்த வொரு மைந்தனது இன்னலையும் அவன் புலம்பிய மொழிகளையும் கலுழ்ந்த கண்ணீரையுங் கண்டுங்கேட்டுந் தன்னால் விளைந்ததன்மை இதுவெனத் தெரிந்த இராமன், கண்கள் பொடியாமல் நெஞ்சம் வெடியாமல் எங்ஙனம் ஆற்றியிருந்தானோ எம்மனோரால் இயம்பலரிது. ஆற்றியிருந்தான் என்பதே மீண்டும் அவன் கடவுளாவதைக் காட்டித்தருகின்றது. என்னல்வேண்டும். ஒரு கடவுளின் திட்டத்தினாலல்லால் வெறும் மனிதனொருவனுடைய மனத்தினால் பொறுக்கக்கூடியது அன்று அது. வான்மீகத்தில் சுக்கிரீவன், அத்துணையும் தன்

னுடைய பேராசையும் வஞ்சனையுமேயொழிய வாலியோ யாதுங் குற்றஞ் செய்திலன் என்றது மாத்திரமன்றி அவ் வாலி தன்பால் கருணையே கொண்டு ஒழுகியுளன் என்பதையும் வாய்விட்டு விளம்பிவிட, அதனைக் கேட்டும் இராமன், சுக்கிரீவனது கைதவத்திற்குத் தானேர்கரவுடைய கணை தந்துதவியதுபற்றி யாதுங் கழிவிரக்கங் கொள்ளாமல் நின்ற நீர்மையை நினைத்து அவனைப் பொறுத்தாலும், இக் கம்பர் நூலில், அங்கதன் புலம்பலைக்கேட்டுக் கரைந்துருகா நெஞ்சுடைய இவ்விராமனை ஒருமனிதனை ஒவ்வுதல் ஒருவராலும் இயலாது. அன்றியும், தன் தந்தையைக்கொன்றவன் எதிர்நிற்கக்கண்டும் அங்கதன் அவனை வெகுண்டேனும் நிந்தித்தேனும்ஒன்றுஞ் சொன்னனல்லன். இதுவும் இராமனது மனத்தைச்சாலப் பிசைந்திருத்தல் வேண்டும். முன்ஓர் அவதாரத்தில் மானுடமடங்கலாய்த்தோன்றிஇரணியனை மாய்த்தபின் அதனைக்கண்டு நின்ற அவன் மைந்தனை நோக்கி,

உந்தையை யுன்முன்கொன் றுடலைப் பிளந்தனையச்
சிந்தை தளராதறம் பிழையாச் செய்கையாய்
அந்தமிலா வன்பென்மேல் வைத்தா யளியத்தாய்
எந்தையினி யிதற்குக்கைம் மாறியா தென்றான்.

அயிரா விமைப்பினையோ ராயிரங்கூ றிட்ட
செயிரிலொரு பொழுதி னுந்தையையாஞ் சீறி
உயிர்நேடு வான்போ லுடலையக் கண்டும்
செயிர்சேரா வுள்ளத்தாய்க் கென்னியாஞ் செய்கேம்.

என்னப்பாராட்டியதும்இவ்விராமனே.பகையுடைய தந்தை தன்னால் கொலையுண்ணக் கண்டும் வாளாவிருந்தபிரகலாதனை இவ்வளவு வியந்தஎம்பெருமான், அன்புகெழுமிய தன் தந்தையை வதைத்து அவன் மைந்தன் அங்கதனால் ஏசப்பெருத இப்பொழுது தன் திருவுள்ளத்தில் என்னவென்ன எண்ணினனோ யாரறிவார்.

மானுடப்பிறவியில் ஓர் தந்தையைஇழக்கின்ற துன்பத்தின் கொடுமையை அறியாதவனுமல்லன் இவ்விராமன். தயரதன் விண்ணுலகு ஏகினனென்பதைப் பரதன் சொல்லக்கேட்டு,

நந்தா விளக்கினைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையே
அந்தோ வினிவாய்மைக் காருளரோ மெய்யுற்றார்

என்றும்,

வண்மையு மான முமேல் வானவர்க்கும் போக்கில்
திண்மையு செங்கோ னெறியுந் திறம்பாத [லாத்
உண்மையு மெல்லா முடனேகொண் டேகினையே
தண்மை தகைமதிக்கு மீந்த தனிக்குடையோய்

என்று புலம்பிய இவ்விராமன், தந்தையை யிழந்து மனமுளைகின்ற ஓர் மைந்தனின் துயரத்தை நன்கு அறியவல்லனே. அன்றியும், தானங்குத் தன் தந்தையின் வண்மை திண்மை தூய்மைகளைக் கருதிக் கருதிக் கலுழ்ந்தது போன்றே அங்கதனும் இங்கு அழுகின்ற மாற்றங் கேட்டபோது நினைப்பென்னுங் காற்றசைப்ப இராமனது நெஞ்சம் நிலை தளர்ந்து சுழன்றிருந்ததில்லையெனின், இன்பதுன்பங்களைக் கடந்து நின்றவொரு பொருளேயன்றி வேறு யாதும் இராமன் ஆதற்கில்லை.

வீடுமன்

[668 பக்கத் தொடர்ச்சி]

சுருங்கக்கூறுமிடத்து, விதுரனுக்குப் பாண்டவர்களிடம் எத்துணைநேயமோ அவ்வாறே வீடுமனுக்கும் சுயோதனனிடம் அத்துணை அந்தரங்க அபிமானம் உண்டு. தன்னைப்போல்பிறப்பில்மாசுடையோரேனும் அறவான்கள் ஆதலாலும் சிறுவயதில் தந்தையின்றி ஆதரவற்றவர்களானதாலும், விதுரன் பாண்டவர்களிட மளவற்ற விசுவாசம்வைத்தான். ஆனால்துரியோதனனது மாசிலாப் பிறப்பும், பாண்டவர்களது மாசுடைப் பிறப்பும் வீடுமனுக்கு ஏற்றமாற்றங்களாயிருக்கலாம். *அன்றியும், 'மானுட இயற்கை மாறுபட்ட குணங்களையே விரும்பும் தகைத்து' என்று மேனாட்டறிஞர் ஒருவர் கூறிய உரை இங்கு ஆராயற்பாலது. குணப்பெருமை யுடையோனாதல் ஒன்று, குணப்பெருமையை மதித்தல் வேறொன்று என்பதும், முற்கூறியதைப் பிரதிபாதிக்கும் வேறொரு உரை. வீடுமனுக்கும், அவன்கற்ற ஆசிரியரிடத்தேகற்று அவனைப் போலவே (வண்மை) விரதமுடைய குணவிசேடமுடைய கன்னனுக்கும் பொருத்தமின்மை நாம் அறிந்ததே. ஆதலின் குணக்குன்றுகளாகிய பாண்டவரது மாண்பினை அதிசயிக்கத்தக்க மனப்பான்மை வீடுமனுக்கு இல்லை யென்பதில் வியப்பொன்றுமில்லை. இவனது மனப்பான்மையும் விதுரனது மனப்பான்மையும் பின்வருகின்ற செய்யுள்களில்இனிது பேதிக்கப்பட்டுவிளங்குகின்றன. உலூகன் தூதுசென்றபோது அரசசபையில், வில் விதுரன், 'இவ் வேதியன் மொழிப்படி மேதினி வழங்காமற்,

புல்வி தூடகரினும் உணர்வி லாதவர்
புகலும் வாசகம் கேட்கிற்
செல்வி தூரிய ளாய்விடும் சுற்றமும்
சேனையும் கெடும்

என்று அறத்தின் செம்மையை விளக்கிக் கூறியிருப்பதற்கும்,

நாடு மன்னவ கொடாமல் வெஞ்ச மர்பொர
நாடினை யெனினுளைக்
கோடு மன்னுவி லருச்சுனற் கெதிரெவர்
குனிக்க வல்லவர்

என்றுவீடுமன்கூறியிருப்பதும் முறையேஇவர்களது மனப்பான்மையைச் செவ்வனே விளக்கப்போதும். எனினும் பாண்டவர்களது துன்பவாழ்க்கையும் அவர்அறமும் வீடுமனுக்கும் இரக்கத்தை உண்டாக்குகின்றன. நிரைமீட்சிச் சருக்கத்தில் 'பாண்டவர், தங்கள்காலத்திற்குமுன் தோற்றஞ்செய்தார்களாதலின் அவர்களை மீண்டும் வெங்கானம் ஏகச்சொல்' என்று சுயோதனன் பிதாமகனிடம் கூறியபோது மற்றவன் நெடிதுயிர்த்து,

* தன்னுடையமாசிலாப் பிறப்பின் சீர்மையும், பாண்டவரது மாசுடைப் பிறப்பின் இழிதகவும் துரியோதனனது வாசகங்களில் பலதரமும் பயிலப்பட்டுள்ளன. உதாரணமாக, 'மாசிலா என் பிறப்பு மறியது இவ்வாசகம் மன்னவையில் இயம்பினுய்?' என்றும், 'அன்னையானவரிருவராம் தந்தையர் ஐவராம், இவரும் என் உடன்பிறப்புக்கொல்லோ' என்றும் கன்னனுக்கு எதிர் கூறினன்.

'இன்னலே யுழந்தோர் காலம்
இந்துவின் இயக்கம் தன்னால்
நென்னலே சென்ற தென்றான்
நெஞ்சினில் அழுக்கி லாதான்

அம்மட்டிலேனு மவர்களது இன்னல்களை மனத்தில் கொண்டு இரக்கப்படுகிறானேயென்று நாமும் பெருமூச்செறிதல் இயல்பே. பின்னால் போர்நிகழ்ந்த காலத்துத் தோல்விகள்நிகழவும் வீடுமன் இராசராசனிடம் வாய்விட்டு அவன் செய்த மறச் செயல்களைப் பற்றிச் சிறிது கடினமாகவே கூறுகின்றான். எட்டாம் நாட்போரில் சுயோதனனது தம்பியர் பலர் படவும் அவன் கண்ணும்கண்ணீருமாய்ச் சென்று அம் 'மாதர்கண் படாதபோர்மீளி'' யின்முன், கண்ணீரினால் கணவனைக் கலக்கும் காரிகையென நின்றபோது அவ் வீடுமன் உரைப்பான்,

இரங்கல்நீ சிறிது மைய
எறிபடை எடுப்பதி யாரும்
உரங்கள்போ யமரிற் சாகா
துய்ந்தனர் ஒட வன்றே
சரங்களால் அயிலால் வாளால்
தம்பகை செகுத்துத் தாமும்
சிரங்கள்வே றுடல்கள் வேறாக்
கிடப்பதே செல்வ மம்மா.

என்று கூறித் தன்னுடைய பேரெழில்அமைந்த வீரநோக்குடன், அவ்வென்றியே விழைந்து வெறிகொண்டு திரிந்து இழிந்த அச்சுயோதனனது மனப்பான்மையைப் பிணைப்பது, 'அரசுக்கேற்ற அரி, அங்கணத் தழுக்குத்தின்னும் நரியொடும் வாழ்வது' ஒக்குமன்றோ! ஆயினும், அப்பிணை பொருத்தமற்றதென்பதும் வீடுமனுக்குத் தெரியும். ஆதலின் உண்மையை ஒளிக்கமாட்டாமல் மனம்விட்டுப் பின்னும் சொல்வான்.

இன்னமொன் றுரைப்பக் கேண்மோ
இருசெவிக் கேறு தேனும்
முன்னர சாண்ட வேந்தர்
முறைமையிற் சிதைந்த துண்டோ
மன்னவை தன்னி னின்ற
மாசிலா வடமீன் போல்வாள்
தன்னிரு கண்ணீ ரின்னம்
இவைகொலோ தருவ தம்மா

என்று கூறியஉரையில், அப்பாஞ்சாலிக்கு இழைத்த கொடுமையின் பாவம் தன்னையும்சாருமென்ற உணர்ச்சி ததும்பிப்பெருகுகிறது. இச்சமயத்தில் இவனுக்குச் சுயோதனனிடமிருந்த பாசமும் சிறிது அகலக் காணலாம். மற்றும்நாள், அதாவது ஒன்பதாம்நாள் தான், துச்சாதனன் கன்னனது இறுமாப்புரையைச் சுயோதனன் அனுமதிபெற்று வீடுமனுக்குச் சொல்லினன். ஆதலின் இப்படிச் சுயோதனன் கண்ணுங் கண்ணீருமாய் நின்றதன் உட்கருத்தினைத் தெளிந்து வீடுமனும், 'கன்னனும், சகுனியும்,

நூல்வரு பழுதில் கேள்வி
நும்பியும் நீயு மிந்த
நால்வரும் குறித்த வெண்ணம்
நாளையே தெரியு மையா

என்றும்,

புரிந்தறம் வளர்க்கும் நீதிப்
பொய்யிலா மெய்ய னங்கே
செருந்தவிழ் துளப மாலைத்
திருநெடு மாலு மங்கே

என்றும் தம் வெறுப்பெலாந் தோன்றும் வண்ணம் விட்டுரைத்தார். மறுநாள் இவர் நினைத்தபடியே துச்சாதனனும் வந்து உரைக்கவே, 'ஒருநாளும் நீவிர் பொறுமின்கள்' என்றிரந்துஅற்றைநாள்கழித்து, தன் நெடிய வாழ்வை முடிக்கும் மற்றைநாள் உதயத்தை வரவேற்று நின்றான்.

பத்தாம்நாட் பொழுதும் விடிந்தது. அன்றுதான் வீடுமன் இப்பூவுலக வாழ்க்கையை முடித்து வானமேறும் புண்ணியநாள். கடைசிக்காலத்தில் பற்றுக்கோடாயிருக்கும் நாராயண நாமம் நினைவுக்கு வர, ஆசிரியரும்,

பொலியு நாம மறைக ளோதிப்
பொருள்வி ளக்கு நாமமுன்
கலிய னெங்கள் மங்கை யாதி
கண்டு கொண்ட நாமமே

என்று மிகுந்த கிளர்ச்சியுடன் சருக்கத்தைத் தொடங்குவார். இனிப் பன்னிறச்சோதிவிரித்துப்பொன்றுகின்ற இப்பரிதியின் அத்தமனத்தைக் கவிஞரது கிளர்ந்த சந்தத்திலேயே காண்போம்.

திரண்டு பல்லி யங்கள் தேவர்
செவிபு தைக்க வானிடைப்
புரண்டெ ழுந்த தூளி கண்பு
தைக்க மெய்ப தைக்கவே
முரண்டொ டங்கு சேனை வந்து
முன்னர் நாளை யூகமே
அரண்டொ டங்கு யூக மாக
வாக வத்து ளணியவே.

(ஆகவம் - போர்க்களம்; இயம் - வாதியம்.)

வீடு மன்னெ னுந்த டக்கை
வீரன் மன்னும் வெஞ்சுடர்
காடு மன்னு பரிதி யைக்க
ரங்கு வித்தி ருந்தபின்
தோடு மன்வ லம்பு ரித்து
லங்கு தாம நிருபனும்
நீடு மன்னர் பலரும் வாயி
லிருபு றத்து நிற்கவே.

வனைந்தி லங்கு கழலும் முத்து
வடமும் வாகு வலயமும்
புனைந்த செம்பொன் மௌலி யோடு
பொற்பின் மீது பொற்பெழ

என்று தீட்டிய இச்சொல்லோவியம் சிற்பக்கலையின் எழில்களை நம் அகக்கண்முன் கொண்டுவருகிறது.

முனைந் தடங்க வின்று நாமு
டித்தும் வெய்ய போரெனு
நினைந்து தன்ப னைப்ப தாகை
நீடு தேரில் ஏறினன்.

(வாகுவலயம் - தோள் வளையம். பனைப்பதாகை-வீடுமனது கொடி பனைக்கொடி.)

என்று, படுவதற்கே எழும் வாழ்க்கைநிலையாமையை ஆழ்ந்துணர்ந்து, 'முனைந்தடங்க முடித்தும் போர்' என்று பாடுகின்றான். [illegible] முரசி ரைவாரத்துடன் போர் நண்ணினன்.

சுற்றறுத வில்லினன் தொடைமிடைந்த தூணியன்
கொற்றவாகை வாளினன் கூரவீர வேலினன்
மற்றுமாயு தங்களோடு மன்ன[illegible]முர
செற்றுமார வத்தினோடு [illegible]

1991 93

தானுமுன் னணிந்தவாறு தானையை நிறுத்தியச்
சேனைமன்னன் வந்துநின்ற நிலைமைகண்ட செங்கண்
[மால்
வானினின் றிழிந்தகங்கை மைந்தனுக்கு வானுலாம்
யானமின்ற வித்தியென்ன விசயனே டிசைக்கவே.

'வானினின்றிழிந்த' என்னும்தொடர் மைந்தனுக் கடைமொழி என்பது தேற்றம். எண்வகை வசுக்களில் அவனும் ஒருவனன்றோ? சுயோதனனும்'மீண்டும் தேவரில் ஒருவனானுன்' என்று கூறுகிறான். விரதத்தினுக் கோர் அச்சாணியாய் இவ்வுலகிற் பெருவாழ்வு வாழ்ந்தா னெனினும் இவ் வாழ்க்கையெல்லாம் மறுமைவாழ்க்கையின்முன்எம்மாத்திரம்.இவ்விடத்தில் வடமொழிப் பாரதத்தில் கண்ணன் இளநகை செய்தாரென்றும், அருச்சுனன், 'ஏன் சிரிக்கின்றீர்' யென்றுகேட்க, 'இப்புண்ய புருடன் இக்கர்மபூமியை விடுவதைக் கண்டு என் மனம் பொங்குகின்றது' என்று கூறினாரென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இருள்தரு மாஞாலத்தே இனிப்பிறவியான் வேண்டேன் என்னும் பக்திமார்க்கத்து இளஞ்சூரியனை காரிமாறப்பிரானது உதயகீதம் இப்பாரத நள்ளிரவிலும் கேட்கிறது. அன்று தேவவிரதன் மிகச் சிறந்த போர் விளைத்தான்.

துருபதேயர் மகதநாடர் வெங்குலிங்கர் சோனகர்
கருநடேசர் சிங்களர்க டாரபூபர் கோசலர்
தருமராசன் மதலைசேனை முதுகிடச் சரங்கள்போய்
ஒருவர்போல வனைவர்மேலும் உருவவேவெய் துறு
[க்கினான்.

என்றபடி, மறம்மிகுந்த இவ்வுலகில் மங்கிவிளங்கும் அறவொளியைப் பாதுகாக்க நாடுகடந்து திரண்ட சேனைகளை இவ்வீடுமன்,அறத்திற்கே உழைக்கவேண்டியவன் உலகூட்டும் தனது வெள்ளத்தால் கங்கை மாநதி உலகையே அழிப்பதுபோல், அழித்தான்.

கடைசியில் வீடுமன் பட்டான். அவன் ஆன்மா மறத்தின் கட்டுப்பாடுகளினின்றும் விடுபட்டதென்றே போலும் கண்ணன் சங்கநாதம் செய்தார். போர் நின்றது. கௌரவர், பாண்டவர், ஏனை நாட்டோர் யாவரும் அருகே சேர்ந்தனர். ஆ! அப்போது சரச்சயனத்தின்மீது வீடுமன் கிடந்த ஓர் கிடக்கைதான் என்னே! பிரமசரியஒளிநிரம்பி வீசுமக் காட்சி, சரத்கால சந்திரன் கங்கைத் திரைகளின்மீது செல்லுறும் அக்காட்சியைப்போல் எண்ணுதற் கியலுமே யன்றி எழுதுதற்கு மிசையுமோ!

பொங்கும் கனலா லுலகம் பொன்ற மன்றபோலே
சிங்க மன்னன் பாதம் தொழுது சென்னி
[மேற்கொண் டழுதார்
தந்தை யின்ப மெய்தத் தவமே யின்ப மாகச்
சிந்தைதெளியும் ஞானச் செல்வா செஞ்சே வகனே
என்றழுதனர்.
அழுத மைந்தர் தம்மை யஞ்ச லென்றென் றூற்றி
எழுது தொல்லை வினையை யாரே விலக்கு கிற்பார்
உழுத வாளி யுருவ உங்கள் முன்னர் வீழ்ந்தேன்
பழுதொன் றிலை...

சரத்தின் சயனமே பஞ்ச சயனங்களினும் இனிதாக என்று, கடுமையேதாங்கி இன்பமே தந்துதவிய அருள்வெள்ளம்பெருகிய இம்மேலோன் அவ்வெள்ளத்தைத் தான் பயன்படுத்தியது வாழ்க்கை யளவே நிற்கும் பிதாசம்பந்தத்திற்காக வன்றோ! 'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல்வேண்டும்' என்பதில் உள்ள துறவியின் அருளை நிகர்த்ததென்னினும் அது பயன்பட்டதெல்லாம் இல்வாழ்க்கைக்கன்றோ! அப்படி ஞானத்துறவியின் அருள் தந்தை காதலுக்காகப் பாழ்பட்டதின்பயனைப்பிறந்ததே மாண்புடைவாழ்க்கைக்கெல்லாம் பயனற்றழியும்இப்பாவம் நிறைந்த பாரத உலகம். * விடுதலை யடையாத யவன உலகம் விடுதலை யடைந்த இந்திய உலகமல்ல; புத்தர் முதலாக அடியார்கள் ஈருகத் தோன்றிய குன்று ஞானம் விளங்கிய பொற்கால உலகமல்ல. அவ்வுலகில் திருவாதவூரடிகள்முதலிய செந்தமிழ்பாடும் தெய்வங்கள் தோன்றவில்லை.

'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்' வாழ்ந்த இவ்வாழ்க்கை நன்கு ஆராய்ந்தால்,வியர்த்தமே. ஆதலின் முடிவாக இவ்வீடுமனது வாழ்க்கையைப் பின்வரும் ஞானத்திரு அடியில் ஐக்கியப்படுத்துவோம்.

பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைக்
தேழை யானேன்.

* இங்குப் பாரதஉலகம் என்றது பாரதம் நிகழ்ந்த அக்காலத்தைக் குறிப்பிடுவது.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[638-வது பக்கத் தொடர்ச்சி]

4. நரன் தன்மையும் அப்பர் தேவாரக் கூற்றும்

பாண்டு புத்திரனாகிய பார்த்தன் திருப்பணிகள் பல செய்து வேண்டும்வரங்களையும் பெற்றான். இவனுக்கு அருள்செய்யவந்த பெருமான்மூர்த்தம் அறுபத்தினான்கில் ஒன்றாகிய கிராதமூர்த்தமாம்—கிராதமூர்த்தியைப்பற்றி மணிவாசகப்பெருமான் பல திருவிளையாடல்களைக் குறிப்பிடுகிறார். அவற்றுள் ஒன்று பார்த்தனுக்கு அருள் செய்தது. "பத்திவலையிற் படுவோன் காண்க" என்று அவர் விரித்துரைத்தபடியே

மறவனாய்ப் பன்றியின்பின் சென்ற மாயத்தை,
வேடனாய் விசயனுடன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கோபமுடைய ஏனத் தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கோலைப்பகழி உடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினார் பெருங்கூத்துக் காளி காண
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே
திருப்பாசூர் - திருத்தாண்டகம் 2.

என்னுமச் செய்யுளில் அப்பர் கூறியதற்கு விருத்தியுரை வன்றொண்டர் பதிகங்களில் காணலாம். விசயன் சாதாரண பக்தனல்லன்; பகீரதனுக்கும் சித்தர்களுக்கும் ஒப்பிடத்தக்கவனாதலால்,நம்பியாரூரரும் இம்மூவரைச் சேர்த்துச் சிவபெருமான் அருளியதை வியந்து கூறுவர்:—

பணிந்த பார்த்தன் பகீரதன்
பலசித்தர்க்குப் பண்டு நல்கினீர்
திணிந்த மாடந் தோறுஞ்
செல்வ மல்கு திருமிழலைத்
தணிந்த அந்தணர் சந்திநாடொறு
மந்திவா னீடுபூச் சிறப்பிவை
அணிந்து வீழிகொண் டீரடி
யேற்கு மருளிதிரே.
சுந்தரர்—திருவீழி மிழலை. பண் - சீகாமரம் 7.

திரிபுரஞ் செற்றபொழுது சிவபெருமானுக்கு ஒரு அம்பே போதுமானதாக இருந்தது. பார்த்தனுடன் போர்செய்யவோ இவருக்குப் பல பகழிகள் வேண்டியிருந்தன.

ஊர்த்தார் மூவெயி லெய்து
சுடுநுனைப் பகழிய தொன்னூல்
பார்த்த னார்திரள் தோண்மேற்
பன்னுனைப் பகழிகள் பாய்ச்சித்
தீர்த்த மாமலர்ப் பொய்கைத்
திகழ்திரு வாஞ்சியத் தடிகள்
சாத்து மாமணிக் கச்சங்
கொருதலை பலதலை யுடைத்தே.
சுந்தரர்—திருவாஞ்சியம்-பண்-பியந்தைக் காந்தாரம் 3.

இவ்வாறு விசயனுக்கு அருள்புரியுநிமித்தம் செருவில்ஏந்திக் கேழற்பின் செங்கண்வேடனாய்ச்சென்ற காரணத்தைப் பின்வருமாறு வன்றொண்டர் காட்டுகின்றார்:—

வீரத் தாலொரு வேடுவ னாகி
விசைந்தோர் கேழலைத் துரந்துசென் றணைந்து
போரைத் தான்விசய யன்றனக் கன்பாய்ப்
புரிந்துவான்படை கொடுத்தல்கண் டடியோன்
வாரத் தாலுன நாமங்கள் பரவி
வழிபட் டுன்றிற மேநினைந் துருகி
ஆர்வத் தோடுவந் தடியிணை யடைந்தேன்
ஆவ டுதுறை யாதியெம் மானே
சுந்தரர்—திருவாவடுதுறை - பண் - தக்கேசி 4.

வாடா முலையாள் தன்னொடு
மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கேடார் கேழற் பின்சென்று
குறுகி விசயன் தவமழித்து
நாடா வண்ணம் செருச்செய்து
வாவநாழி நிலையருள்செய்
பேழைச் சடையர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே
ஷை—திருக்கடவூர் மயானம்-பண்-பழம்பஞ்சுரம் 8.

வில்லுக்கு விசயனே என்னத் தேற்றும்வண்ணம் அன்பாய் அருச்சுனனுடன் பரமன்போர்புரிந்தனர். அவனிடம் லயமான மனம் தனது திருவடியிலேயே நின்றது. ஆகையால் இருமையற்று ஒருமையாய் நிற்கும் நிலையை வெளிப்படுத்துவதற்கு இப்போர் அவசியமாயிருந்தது. வேடவடிவங் கொண்ட சிவபெருமான் விசயன் நாணியை அறுக்க, அவ்வருச்சுனன் வெகுண்டு தன்வில்லால் வேடத்தலைவனை யடித்தான். அவ்வொரு அடியின் பிரபாவம் பின்வரும் பாக்களால் விளங்கும்.

விண்ணிலுறை வானவரி லாரடி படாதவர்
விரிஞ்ச னரியே முதலினோர்
மண்ணிலுறை மானவரி லாரடி படாதவர்
மனுக்கள்முதலோர்க ளதலக்
கண்ணிலுறை நாகர்களி லாரடி படாதவர்
கட்செவி மகீபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலு மியாவடி படாதன
விருந்து ழியிருந் துழியரோ. 1.

வேதமடி யுண்டன விரிந்தபல வாகம
விதங்களடி யுண்டன வோரைம்
பூதமடி யுண்டனவி நாழிகை முதற்புகல்செய்
பொழுதொரு சலிப்பில் பொருளின்
பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப்பில்
பிறங்கலர சன்றன் மகளார்
நாதனம லன்சமர வேடவடி வங்கொடு
நரன்கையடி யுண்ட பொழுதே. 2.

ஆகையால் கிராதமூர்த்தி தனஞ்சயன் கையினால் அடிபட்டது அவனுடைய அன்பினது பெருக்கை விளக்குவதற்கு என்பது திண்ணம். பிட்டுக்கு மண் சுமந்தபோதும் பாண்டியனிட மிவ்வாறு அடிபட்டு மணிவாசகப்பெருமானது திருவுள்ளத்தின் மேன்மையை வெளியிட்டார். வில்லின் திட்பத்தைப் பரிசோதித்துப் பற்குனனுடன் ஒரு வேடனாய்ப் போர் புரிந்த விஷயத்தைத் திருநாவுக்கரசு தனதுஆருயிர்த் திருவிருத்தத் திருப்பதிகத்தில் பின்வருமாறு சுட்டுவதைக் காண்க:—

பொறுத்தா னமரார்க் கமுதருளி
நஞ்ச முண்டுகண்டம்
கறுத்தான் கறுப்பழ காவுடையான்
மங்கை செஞ்சடைமேல்
செறுத்தான் தனஞ்சயன் சேனை
ரகலங் கணையொன் றினால்
அறுத்தா னடிநிழற் கீழதன்றோ
வென்ற னாருயிரே.
—ஆருயிர்த் திருவிருத்தம் - 6.

ஆகையால் துவாபரயுகத்தில் பூபாரம் நீக்கக் கண்ணன் அவதரித்தபோது, சிவனருள் வேண்டியதாக இருந்தது. இதற்கே சிவபெருமானைவழிபட்டுப் பாசுபதம் பெறவேண்டுமென்று அருச்சுனனைத் தூண்டினார். அத்துணை சிவபக்தி வேறு மனிதரிடம் அக்காலத்தில் இல்லையென்பது அதனாலேற்படும்.திருமால் அவதாரங்களில் 9-வதுஅவதாரத்திலேயே முக்காலமுணர்ந்த ஞானியாய்க் கண்ணன் திகழ்ந்ததால் பகவத்கீதை போதிக்கவும், அதற்குத் தகுந்தவன் பார்த்தன் சீடனாய் நின்றதும், பிறகு பதின்மூன்றுநாளிரவில் தனஞ்சயனுடன் கண்ணன் கைலாயம்சென்று பாசுபதம் அவனை வேண்டவைத்ததும், நரனிடம் உதித்த சிவஞானத்தின் தன்மையை விளக்கும். சரம் விசயற்கருள்செய்தானைச் சம்பந்தர் தனது திருமணத்தில்

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங் கட்டுஞ் சென்னி யரன்பதி யாவது
நட்டக்கொட்டாட்டறுநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்திராலெம்பிரானிரே
என்பர்.
—திருநல்லூர்-பெருமணப் பதிகம் - 6.

சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கைமார்

[670-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறுபாராட்டப்படும் தாய்மார்கள்உதரத்தில் அப்பர் பிறந்தார், சம்பந்தர்பிறந்தார், திருநீலகண்டயாழ்பாணர் பிறந்தார், முருக நாயனர் பிறந்தார், திருநீலக்க நாயனர் பிறந்தார், சிறுத்தொண்டர் பிறந்தார், குலச்சிறைபிறந்தார், அப்பூதியடிகள் பிறந்தார், இன்னும் எண்ணிறந்த பல சிவபக்தர்கள் பிறந்தனர். ஆகையால் அக்காலத்திய தாய்மார்கள் கற்பு, கல்வி, ஒழுக்கம், திறமை, சாந்தம்,மனவன்மை, முதலியன பெற்றிராவிடில் இத்தகைய பேரறிவாளர் ஒருங்கே பிறந்து தமிழ்நாட்டைச் சன்மார்க்கத்தில் சீர் திருத்தி ஏற்றம் பெற்றிரார். இன்னதற்குத் தர்க்க ஒழுங்குகளில் அகச்சான்றுகளைப் பரிசோதிப்போமாயின் ஆங்காங்குக் காணப்படும் மங்கையர்க்கு அரசியர்களின் தன்மை செவ்வனே புலப்படும். திருநாவுக்கரசு நாயனர் பாடிய 'கூற்றுயினவாறு' என்னும் திருப்பதிகத்தில்,

காத்தாள்பவர் காவ லிழுந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

என்றிப்பாசுரத்தில் குறிக்கப்பட்ட வாகீசரின் பாதுகாப்பாளர் யார் என்பதும், அவர் காவல்இழந்தமை எங்ஙனம் என்பதையும் பெரியபுராண வரலாற்றால் யாம் அறிகின்றோம்.

வாகீசரை நமது சைவசமயத்தின்சிகரத்தில் ஏற்றி வைக்கத் திருஅவதாரம் செய்த அம்மையார் திலகவதியார் அன்றோ? கலிப்பகைக்கு நியமித்த பாவம் அன்றி யாதொரு. திருமணச் சம்பந்தமும் ஏற்படவில்லையெனினும் அவர் இறந்தமையே தனக்குமங்கலம் அற்றதென்றும் அன்னோருக்குச்சதியாய்த் தீயிற்புக எண்ணங்கொண்டாரென்றும், தாய் தகப்பன் அற்ற அப்பரைக் காப்பதன் நிமித்தமே உயிர் துறவாது தவவேடம்பூண்டு இவர் ஒழுகிவந்தனர் என்னவும் அறிகின்றோம். இவரை நமது சமயாசாரிகளுக்குக் குரு என்னவே கொள்ளல்வேண்டும். இவரது போதனையால்அன்றோ அப்பர் சமணம்நீங்கியதும் தேவாரம் பாடியதுமாம்.

இனி, திருவதிகைவீரட்டானத்தைவிட்டுச் சற்று அப்பர் செல்வழிச் செல்வோம். திருப்பழனத்தின் சமீபத்தில் இருக்கின்ற திங்களூர் அப்பூதியடிகளின் மனைவியார் எத்தகையபெருந்தகை. அப்புனிதமாது இறந்தமகனை மூடித் திருநாவுக்கரசுக்கு அன்னமிட்டது அப்பூதிக்கு இல்லறம் சிறப்பித்ததன்றோ? திருப்பழனத்தில் அப்பர் திருவாய் மலர்ந்தருளினர்:—

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தாள்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கொடியையே.

இனி, சோழன் மகளும் பாண்டிமாதேவியும் ஆன மங்கையர்க்கரசியார் இலக்கணத்தைச் சற்று நோக்குவோம்.

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன் திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி

என்பார். பந்தாடுகின்ற அவளது விரலானது சிவன் திருநீற்றினை வளர்த்தது என்று குறிப்பிட்டார். மற்றோர் பாசுரத்தில்,

முத்தின்தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும்
நீறுந்தன் மார்பினின் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதம்அடுத் தாற்போல்
அத்தனர் உமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே

சம்பந்தர்.

அப்பூதியடிகளின் மனைவியார் எத்தகைய திருஉள்ளம் பெற்றவர் என்பது சேக்கிழார் வாயிலாய் யாம் அறிந்ததே. இறந்தமகனைப் "பாயினுட் பெய்துமூடி," "அறஇது தெரியாவண்ணம் அமுதுசெய்விப்போம்" என்று இசைந்ததும்; மற்றும் அவ்வருமைப்புதல்வன் உயிர்பெற்று மீண்டும் எழுந்தகாலத்து மனமகிழ்ச்சி கொள்ளாது,

அறிவரும் பெருமை அன்பர்
அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான்
இவனென்று சிந்தை நொந்தார்

இன்னவர்கள் மனம் எத்தன்மைத்து என்பதை ஆராய ஆராய நலம் பெருகும்.

இவர்மாத்திரமல்லர். திருச்செங்காட்டங் குடியிலிருந்த சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையும் "வேதகாரணர் அடியார் வேண்டிய மெய்ப் பணிசெய்யத் தீதில்குடிப் பிறந்தார்." வந்த அடியாருக்குத்தமது திருமனையறத்தின் வேராகின்றசீரான தேவனைக் கறிஅமுதுசெய்துவைக்கத் தமது கணவர் கேட்டகாலத்து நயந்து "நம்மைக் காக்கவரும் மணியைச் சென்று பள்ளியினிற் கொண்டுவாரும்" என்றார் இவ்வம்மையார். இதை நாம் உற்றுநோக்குகிற காலத்து இவ்வம்மையார் எத்தகையார், இவர்நெஞ்சம் கல்நெஞ்சமா, என்னும் வினக்கள் எழும். சேக்கிழார் இதற்குப்பதில் சொல்லிவிடுகிறார். அவ்வம்மையார் அங்கு இல்லாத மகனை,

"செய்ய மணியே சீராளா
வாராய் சிவனர் அடியார்யாம்
உய்யும் வகையால் உடனுண்ண
அழைக்கின் றார்."

என்ற ஓலமிட்டதாகப் பெரியபுராணம் கூறும்.

ஆதலால், அக்காலத்துமங்கையர் தமது சகோதரர் கணவர் முதலான ஆண்மக்கள் எவ்வாறு இருந்தாரோ அவ்வாறு தாமுமிருந்து ஒத்து உழைத்ததாகத் தேவார அகச்சான்றுகளா லறிகின்றோம். அக்காலத்திய ஆண்மக்கள் சைவப்பற்று நிறைந்தவராய்ச் சிவனடியார்களைச் சிவனென வழிபடும் கொள்கையராய் இருந்தனரென்று விளங்குகிறது:—

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங்கு வந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"

எனத் திருநாவுக்கரசரும், பாண்டியன் முதன்மந்திரியான குலச்சிறை,

"வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்
வெள்ளை நீறணியும் கொற்றவன் தனக்கு மந்திரி"
"கணங்களாய் வரினுந் தமியராய் வரினும் அடியவர்
தங்களைக் கண்டால், குணங்கொடு பணியும்"

என்னக் குடிகளைப்பற்றியும், பிரபுக்களைப்பற்றியும் முறையே விரித்துக்காட்டினர். ஆகையால் இத்தகைய தந்தைமார் இடையிலும் சகோதரர்களிடையிலும் பழகி அத்தகைய கணவருடைன் வாழ்நாள்கழித்துச் சிவஞானச் செல்வங்களைப்பெற்ற மங்கைமார் வேறு விதமாய் எங்ஙனம் இருத்தல் கூடும்.

எனவே அக்காலத்திலிருந்த தமிழ்மக்கள் போல் இக்காலத்திய சகோதரரிருப்பின் அத்தகைய மங்கையர்களை ஒவ்வொரு இல்லத்திலும் நாம் காணக் கூடும். சீலமும் நோன்பும், நமது தேசத்தில் இன்னும் நிலை நின்றிருப்பது ஆண்மக்களாலோ, அல்லது பெண்மக்களாலோ? வீட்டு முற்றத்தில் நிற்கும் இரவலனுக்கு அரிசி அல்லது அன்னம் அளிப்பவர் ஆண்மக்களா, பெண்மக்களா? இன்னமும் பழையவழக்கங்கள் சீர்குலையாதுநிலைநிற்பது பெண்பாலாராலன்றோ? ஆதலால் சுயநலம் பாராட்டி உலோகாயதத்தைக் கையாளாமல் ஆண்மக்கள் உழைப்பாராயின் பெண்மக்களும் அவருக்குமுன்னமே நான்கடி வைப்பர் என்பது திண்ணம்.

இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை —திருக்குறள்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம்பத்து 10-ம் தசகம்.

[671-வது பக்கத் தொடர்ச்சி]

11-ம் பாசுரம்.

அடிக்கீ ழமர்ந்து புகுந்தடியீர்
வாழ்மி னென்னென் றருள்கொடுக்கும்
படிக்கே ழில்லாப் பெருமானைப்
பழனக் குருகூர்ச் சடகோபன்
முடிப்பான் சொன்ன வாயிரத்துத்
திருவேங் கடத்துக் கிவைபத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து
பெரிய வானுண் ணிலாவுவரே.

உரை:—அடியீர் - எம்பெருமானிடத்தில் தொண்டுசெய்ய இச்சையுள்ளவர்களே! (எட்டாம்வேற்றுமை) அடிக்கீழ் - அவனுடைய பாதங்கள் மூலத்தில்,அமர்ந்து-வேறு பிரயோஜனங்களில் உருசி இல்லாமல் அவைகளிலேயே அமைந்து,புகுந்து - அவைகளிலே பொருந்தியிருந்து, வாழ்மின் - ஆநந்தமடையுங்கோள், என்று என்று - ஒவ்வொரு பக்தர்களுக்கும் தனித் தனியே சொல்லி, அருள் கொடுக்கும் - கிருபை செய்யும்படி - (நீதி) பிரகாரம், கேழிலா - ஒப்பில்லாத, அதாவது ஆச்ரிதரிடத்தில் அன்பு பாராட்டி உதவுதலில் இணையில்லாத, பெருமானை - உத்தமனை, பழனக் குருகூர் - வயல்கள் நிறைந்த குருகூர், சடகோபன் - ஆழ்வார், முடிப்பான் - பகவானைச் சேரவேண்டுமென்று தனக்கிருந்த மனோரதம் முடித்துக்கொள்ள, சொன்ன - திருவேங்கடமலையின் ஸமர்த்தியைச் சொன்ன, திருவேங்கடத்துக் கிவைபத்தும் - திருவேங்கடத்தைக் குறித்துச் சொன்ன இப் பத்துப் பாட்டும், பிடித்தார் பிடித்தார் - தங்களுக்கு அம்மலை நிர்வாஹகரான பெருமானை ஆச்ரயித்திருக்கிறவர்களை ஆச்ரயித்திருப்பார், பெரிய வான் - வைகுண்டத்தில், வீற்றிருந்து - நாசம் புனர்ஜநநம்இவைகளின் நின்றும் விடுபட்டு அமரர் ஸாம்ராஜ்ஜியத்தை அடைந்து, நிலாவுவர் - நித்தியமாகிய பேரானந்தம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வார்கள்.

குறிப்பு:—திருவேங்கட முடையானை வைகுண்டத்தில் வீற்றிருக்கும்எம்பெருமானாகப்பாவித்துக் கூறுகிறபடி இத்தசகம் அமைந்திருக்கிறது அறியவும்.

இவ் வாறும்பத்து 100 பாட்டில் ஒவ்வொரு தசகத்தின் சங்கிருஹத்தை வழக்கம்போல இங்கு எடுத்தெழுதுவோம். முதல் பத்தில் ஆசாரியர் புருஷாகாரத்தாலே பரிந்து பேசுவதால் பகவான் அடையப்படுவானென்றும் (2)ல், ஆச்ரிதர் இருக்கின்றவிடத்தைத் தானே தேடிவந்து இரக்ஷிப்பதின் பொருட்டு வந்து மேல்விழுபவனுவானென்றும்(3)ல்,பாஸ்பரம் விருத்தமான வஸ்துக்களைத் தன் அநாதிசிய ஸாமர்த்தியத்தால் தனக்கு விசேஷ விபூதி (ஐசுவரியம்) யாக வுடையவனென்றும் (4)ல், ஆச்ரிதர்களுடைய அகங்கார மமகாரங்களை ஒழிவித்துத்தரும் சுபாவனென்றும்(5)ல்,அவர்களைவிட்டுத்தான் அகன்றிருந்தாலும் அவர்களுக்குத்தைர்யாதிகளை அளிப்பவனாய் நிற்கின்றானென்றும் (6) ல், ஆச்ரிதருடைய அகங்கார தைரிய சாதுரியாதிகளை, தன்னிடம் ஈடுபாடு காரணம்பற்றி அபஹரித்துக்கொள்ளுவானென்றும் (7)ஆச்ரிதர்கள் தன்னைவிட்டுத் தனிநின்றாலும்அவர்களுக்கு எவ்வகையான அபவாதம் பயம் இவைகள் நேராதபடி காப்பாற்றுபவனாயும் அச்சமயங்களில் தைரியத்தைஊட்டிஅவர்களைத்தேர்ப்பிப்பவனாகவும் (8) அவர்கள் தன்னுடனே கலந்து பரிமாறவே உபய விபூதிகளையும் அவர்களிட்ட வழக்காய் ஆளுபவனா

யும் (9) அவனைவிட்டுப் பிரியில் ஆச்ரிதர்ஸஹிக்கமாட்டாதவராய் நோவுபடுத்துபவனையும் (10) அவனைவிட்டு ஈஷத்தும் பிரியாத இலக்குமிபிராட்டி புருஷாகாரத்தால் பிரபதநத்திற்கு -(அவனை யடைவதற்கு) சுலபனுமான திருவேங்கடமுடையானை ஸர்வலோக சரணியனைச் சடகோபர் ஸாதித்தருளினர்.

விசேஷக் குறிப்பு:—(ஸங்கிரஹம்) ஜகத்காரணத்தையே ஸேவை செய்யவேண்டுமென்று வேதங்கள் ஓதுவதால், முதல் பத்தில், பகவான் நாராயணனே ஸேவைக்கு யோக்கியனென்றும்(2)ம் பத்தில், அவனின் திவ்விய ஸௌந்தரியத்தாலும் குணநிசியங்களாலும் ஆச்ரிதர்களுக்கு ஸர்வ போகங்களையு மளிக்கவல்லனென்றும் (3)ம்பத்தில், தன்னைஸேவைசெய்வதின் நிமித்தமாகப் பக்தர்களின் பாபங்களைத்தொலைத்து அவர்களை உஜ்ஜீவிப்பதின்நிமித்தமாய்த் திருக்கோவில்களில் உலகத்திலெங்கும் சுபாச்ரய திவ்விய மங்களவிக்ரகங்களாய் எழுந்தருளியிருக்கின்றனென்றும், பக்தர்கள் கைங்கரியங்கள் பெறுவதி னிமித்தமே திருமலையிலே தாம் நிற்கும் நிலையை "வழுவிலா வடிமை செய்யவேண்டும்" 3—3—1 பிரஸ்தாபித்துப் போந்து (4)ம் பத்தில் அவனைப்பற்றி யடைய அவன் திருவடிகளே உபாயமென்றும் - ஐசுவரியம் சுவர்க்கம் பரிசுத்தாத்ம ஸவரூபப் பிராப்தி இவைகளெல்லாம் வாஸனை ருசிகளாய் அவனை யடையத் தடைசெய்யும் விரோதிகளென்றும் (5) ம் பத்தில், (5-7-10) ல் "ஆறெனக்கு நின்பாதமே தந்தொழிந்தாய்" என்றும், நிரதிசய ஆநந்த ஸவரூபமான பகவானின் கருணை எந்தக் காரணத்தினால் உண்டானதென்பதை நிரூபணஞ் செய்யமாட்டாமையாலே ஸஹஜமென்றுசொல்லலாம்படியிருக்கிறபடியும்,பக்தர்கள் உபாஸனையை வியாஜரூபமாக அவன் எதிர்பார்க்கிறானென்றும்,அவனே தன்னையடையும் உபாயத்தில் (பிரபதநத்தில்) சேதநனை மூட்டிவைக்கிறபடிகளை உபதேசித்து,இவ்வாறும்பத்தில்கடல்கரைமுன்னிட்டுப் பெரியபிராட்டியார் புருஷாகாரமாக ஸாங்க பரந்நியாஸம் செய்து திருவேங்கடமுடையான் திருவடிகளை அடைக்கலம்பற்றி "அமர்ந்து புகுகிறார்."

நால்வகைப்பாக்களும் நாற்குலமக்களும்

நமதுமிகப்பழையதமிழ்மொழிக்கெனத்தொன்றுதொட்டுச் சிறப்புரிமைவாய்ந்த யாப்பிலக்கண நியதிகளுள் முதன்மையாயினவும், பழம்புலவர்களான் முறையே கையாண்டுவந்தனவும், பாட்டுடைத் தலைவர்களையும், கிளவித் தலைவர்களையும், எஞ்ஞான்றுந் தத்தம் நிலையினின்று மாறுபாடின்றி அலுவல்களைச் செய்து முடிக்குமாறும் அறிவு கொளுத்திய நான்மறைகளும்ஆகிய,வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா, எனப்படும் இந்நான்கு பாக்களும் ஒன்றன்பின் ஒன்றாய் அந்தணர்பாவும், அரசர்பாவும், வணிகர் பாவும், வேளாளர் பாவும் ஆகும். இனி, இவற்றை இங்ஙனம்தொடர்படுத்தி வழங்குவதற்கு உரிய காரணங்களை யாராயுமிடத்து—வெண்பா, செப்பலோசைத் தாய், ஏந்தல், தூங்கல், ஒழுகலை யுடைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையவடிகள் நாற்சீராய், வெண்சீரு மியற்சீரும் வந்து வெண்டளைதட்டு வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர், என்னும் வாய்பாட்டால் முடிவதுடன், குற்றிகரம், குற்றுகரம், ஒற்று, ஆய்த முதலியவின்றி ஏழு எழுத்து முதல் பதினாறு எழுத்துவரை மேல்வந்த மூன்றடியும், அஞ்சு எழுத்து முதல் பத்துஎழுத்து வரை ஈற்றடியும், நிறைவெய்துமென அறிகின்றோம். இவ் வெண்பாவிற்குஉரிய அந்தணரோ வெனின்; வேதங்களை உயர்த்தியும் சமமாகவும் தாழ்த்தியும் உச்சரித்துச் செப்பும் ஒலியினையுடையவராய், இறுதியடியாகிய வீட்டின்பம் எய்தற்பொருட்டு அறம், பொருள், இன்பம் எனும் மூன்றனது சிறப்பினையுடையராய், இருக்கு எசுர் சாமம் அதர்வணம், என்ற நான்கு மறைகளில்விதித்தவற்றையே மேற்கொண்டவராய், தூய்மைக்குணத்தால் நிகழ்த்தும்இயல்போடு வெண்மைப் பூணூலுடையராய், பிறரோடு கலந்து கூடற்பரன்மையிலராய்ச் சுபமுகூர்த்த காலங்களிலே பிறரூற் பொற்காசு வழங்கப்பெறுபவர்களாய், எங்கட்கில்லை யினிப் பிறப்பு என்போராய், உலகவாழ்க்கையைத் துறத்தற்கண் அவர் குறித்த எல்லையைச் சேர்தற்பொருட்டுவருகின்ற நன்னாளையேகருதினராய் இருப்பவராய், அந்நாளில் மலர் தூவப் பெறுவோராய், குழந்தைப் பருவங்களில் ஒன்று இரண்டு மூன்று நான்கு பிராயங்கழிந்து ஐந்தாவதுபிராயத்திற் பூணூலணிபவராய்,பருவமா றகன்றவேழிற் பலகலைபயில்பவராய், பதினாறுமாண்டிற்கலைநிறையப்பெற்று, பஞ்சதந்திரங்களும்தெரிந்து மனைக்குவிளக்கா மனையைப் பெற்றுத் திகழ்வோர் ஆதலின் வெண்பாவை அந்தணர் பாவெனச் சொல்வது ஒருவாறு பொருத்தம் உடைத்தென உணர்ந்தோம். இதுவேயுமன்றி முன்னோர் சான்றுகாட்டிய வெண்பா ஒன்றும் கிடைக்கப் பெறுகின்றோம். அஃதாவது—"ஆதியா யாற்றலுடைத்தாய் வரம்பிகவா நீதிசால் நூல்பொருந்தி நிற்றலால் - ஓதுநீர் பண்பாவுஞ் சொல்சீர் மறைவாணற்பாற் சார்த்தி வெண்பா உரைத்தார் விரித்து"

இனி,இரண்டாவதாக, ஆசிரியப்பா அகவலோசையை யுடைத்தாய்ப் பலதளையும் பல வடியும் விரவி அளவடிக ணிரம்பியதாய், பொருட் பொலிவுடைத்தாய், ஏ. ஓ. ஈ. ஆய். என். ஐ. எனவரும் அசைச்சொற்களோடு, ஏந்தல், தூங்கல், ஒழுகலையுடைத்தாய் அகவி முடிவுபெறும் இவ்வாசிரியப்பாவுக்கு உரிய அரசரோ வெனின்; தமது இராஜதானியடங்கப் பரந்து சென்ற கீர்த்தியையுடையவராய், நீதிநூல் விதிப்படி சாமபேத தான தண்டம் என்ற உபாயங்களைக் கடைப்பிடித்தவராய், வைத்தா ரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம், கலத்தினும் காலினும் வரும் பண்டங்களுக்கு இறையாயதும், பகைவரைத் தெறுதலான் வரும் பொருளும், ஏனை ஆறில் ஒன்றனையுமுடையவராய்த் தம்மொடு மாறுபட்டாரை அம்பாற் சீர்திருத்தியும் நட்பாய் அடுத்தாரைத் தாங்கியும், உண்பன உடுப்பன வழங்கியும், வினைவகையால் மாறுபடுவோரை ஆராய்ந்தறிந்தும், முறையிடுவோரைக் காண்டற்கேற்ற அவகாச முடையராய் அன்னவர்தாம் துன்புறற்குக் காரணம்என்னை என விசாரித்து முறைசெய்தும், கண்டார் விரும்புந் தோற்றப் பொலிவுடையராய், குற்றஞ் செய்தோரைத் துன்பஞ்செய்தல் பொருட்கோடல் ஒறுத்தல் என முத்திறத்தி னியைந்தன புரிந்து கண்டித்து வருதற் சிறப்புநோக்கி இதனை அரசர் பாவெனச் சொல்வது யாவரும் ஒப்பத்தகுந்ததெனக் காண்கின்றோம்.

இனி, மூன்றாவதாகக் கலிப்பா—துள்ளலோசையையுடைத்தாய்த் தமக்கு ஓசையாகவுடைய வெண்பாவும், ஆசிரியப்பாவும் ஆகச் சேர்த்து மூன்றோசையானும் முடியும். இக்கலிப்பாவுக்குரிய வணிகரோ வெனின்; காடிடையிட்டும் நாடிடையிட்டும் சென்று தத்தம் வாணிகத்தொழிலை மேற்கொண்டு அதனாலடையும் ஊதியத்தாற் றமது புகழைப் பரவச் செய்வதுடன் அந்தணரையணுகிச் சூழ்ச்சி முதலிய தெளிந்தும் அரசரான் நன்கு மதிக்கப்பட்டும்வாழ்தலுண்மை யாதலின் இதனை வணிகர் பாவென்பது இழுக்காகாது.

இனி—வஞ்சிப்பா— தூங்கலோசையுடைத்தாய், தனிச்சொல்லோடு புணர்ந்து ஆசிரியச் சுரிதகத்தால் முடிவுபெறும். இவ்வஞ்சிப்பாவுக்குஉரிய வேளாளரோ வெனின்; இவர் உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் என இருதிறத்தினராவர். உழுவித்துண்போருக்கு யாதொருவித இடர்ப்பாடுங் கிடையாது. ஏனையோரைப்பற்றி யாராயுமிடத்து அவர் செய்யும் பயிர்த்தொழில் சம்பந்தமாய்த்தேகமுழைத்துநாள்முழுதும் பிறர் நலனுக்கே பெரும்பாலு முரியராவர். பிற்பகுதியில்வரும் ஊதியங்களை யெல்லாம் ஒருசேர வழங்குமெனக்கூறும் உழுவித்துண்ணுவாரது ஒப்பற்ற சொல்லுக் கிலக்காகிக் கடைசியாக அரசர் நீதி முதலிய ஆதரவின் பேரில் ஒருவாறு உலகவாழ்க்கையைச் செலுத்தற் கியன்றவராவர்; ஆதலின், இதனை வேளாளர் பாவெனற் கியைபுடைத்தா யிருக்கின்றது. (தொடரும்)

புயலின் கொடுமை

வற்றாத் திருவருளால் மாயை கருவிருந்து
பெற்றெடுத்த வைந்துபெரும் பிள்ளைகளுள்-சொற்ற
உருவ ரிருவ ரருவ ரிருவர்
ஒருவ ரருவுருவ ருள்ளே—அருவனைப்
பிண்டத்து ளொன்றாகிப் பின்னிரண்டாய்ப் பத்தாகி
அண்டத்து ளொன்றா யனந்தமாய்—மண்டுகுளிர்
வாடையாய்க் கொண்டலாய் மாமலையிற் றென்றலாய்க்
கோடையா யெங்குங் குலவுவாய்—சேடனுடன்
பொன்னம் பொருப்பிற் பொருது சிரமூன்றை
முன்னம் முரித்தா யெனமொழிவர்—மன்னும்
அலகு பெறுமூழிக் காலத் தகில
வுலகு மழியுரவோ னென்பர்—சலியாது
வெல்லுமொப்பி லாததனி வீரனீ வீணரைப்போல்
புல்லுஞ் சிறியதொழி லேன்புரிந்தாய்-செல்லுகின்ற
சீரார் பவவருடம் சேர்கார்த்தி கைத்திங்கள்
ஏரா ரொருபதினொன் றிந்துநாள்—கூருமிருள்
மண்ணும் விசும்பும் மயங்கச் செறிந்தெங்கும்
நண்ணுமிர விற்களவாய் நாடிவந்து-எண்ணுமொரு
வாடையாய் மெல்ல வழங்கியபின் மாறியுளுங்
கோடையாய் நின்று குமுறியே—நாடெங்கும்
பொல்லாக் குறும்பு புரிந்தாய் புரிந்தவெலாம்
சொல்லா லுரைக்கத் தொலையுமோ—வல்லநா
வீரா யிரமுடையோற் கேலுமெனி லும்புகல
வாரா னவனுன் வயிரிகாண்—ஆராய்ந்து
மற்றெனக்கு நீசெய்த வஞ்சனைகள் கூசாது
சற்றெடுத்து மெய்யாகச் சாற்றுவேன்-குற்றமிலாப்
பத்தியத்துக் காகுமெனப் பன்னாட்—பரிந்தெடுத்து
வைத்து வளர்த்த வனமுருங்கை—கொத்தாகக்
காரோடு பூத்துமிகு காயோடு நின்றவற்றை
வேரோடு சாய்த்து விழுத்தினாய்—வேரோடு
பூவு மிலையும் பொருந்தா துனக்கென்று
தாவிப் பிடர்பிடித்துத் தள்ளினையோ—மேவுடற்கு
நன்றென்று நேயமுடன் நட்டு வளர்த்தநெல்லிக்
கன்றொன்றிவ் வாண்டுதான் காய்கொண்டு-தன்றசுவை
தந்துமுற்றாப் பிஞ்சுகளைத் தாய்வருந்த வேகுலுக்கிச்
சிந்திமுற்றும் பூமேற் சிதறினாய்—மைந்துடைய
சேயனுமான் போலிவற்றைத் தின்றோர் சிரஞ்சீவி
ஆயமர்வா ரென்றழுக்கா றுற்றாயோ—வேயில்
விலாவளைத்து நிற்கின்ற வேழம்பர் போலெம்
துலாவளைத்துவிட்டதென்னச் சூது—நிலாதெங்கும்
ஓடுகா லாடி யுனைப்போல மற்றதுவும்
ஆடுகா லாடியென வஞ்சியோ—தேடியே
வெட்டிநட்ட முண்முருக்கம் வேலிதனைக் கால்கொண்டு
தட்டிப் புரட்டுதலுஞ் சால்பாமோ—தொட்டுத்
திரட்டுஞ் செயலன்றிச் செய்தவர்கள் நோவப்
புரட்டுந் தொழிலுநனி போமோ—உருட்டிக்
குருகிளநீர்த் தெங்கின் குலைகுலுக்கி வட்டுத்
திருகி யெறிந்ததென்ன தீங்கு—வருமுயிரை
உய்க்குந் தயையன்றி யொன்றின் தலைதிருகிப்
புய்க்கும் மிகையும் புகழ்ச்சியோ—உய்க்கின்ற
வாசனைக்கும் பூசைக்கும் வைத்தமலர் மல்லிகையை
மூசி முறித்தெறிந்த மூர்க்கமென்ன—பேசியிடில்
நானு மனங்குமுற நம்மைப்போல் மற்றுமது
தானு மனங்கமெனுந் தன்மையோ—மானக்
கொடுவரியின் கூருகிர்ப்போர்க் கொன்றை தலைசாய
நடுமுரியச் செய்ததென்ன நாசம்—வடிவுகண்டு
பாரும் விசும்பும் படரும் பரியான
ஊருங் கலைகண்டா லுட்குமோ—சூரனெனும்
மாமுதலைச் சேய்கிழித்த வாறு செழுந்துளபப்
பூமுதலை நீகிழித்த புத்தியென்ன—மாவாழ்
அரியுமா லன்னாற் குரியததை நானும்
திரியுமா லென்ற செருக்கோ—புரியும்
வலுமிச்ச மாக வளைத்து மிதித்தென்
எலுமிச்சை வேரிடுங்கி விட்டாய்—தலைமொய்க்க
ஏறினா லுன்னை யிறக்க வதன்பழத்தின்
சாறினா மென்றறிந்த தன்மையோ—கூறுகின்ற
பந்தலுக்குத் தூணைப் பார்த்தெடுத்து நட்டுவைத்த
சந்தமுருக் கைத்தள்ளிச் சாடினாய்—வந்து
புதைகா லிதுவு மதுபோற் புதைவாய்
உதைகா லியானுமென வோர்ந்தோ—துதையும்
மடலொடியா தன்பாய் வளர்த்தபூ கத்தின்
மிடறொடித்து விட்டதென்ன விந்தை-இடமுடைய
மாகமேற் பூக மெனவருங்கொல் நானன்றோ
மாகமேற் பூகமெனும் வாதமோ—வேகமுடன்
தாளாற் பிறந்து தலையாற் குலையீன்ற
வாழை யரைமுறிய வாட்டினாய்—வாழைதரு
காயும் பழமுங் கடுநட் புனக்கென்பர்
ஆயும் பகையா யமைந்தவோ—ஓயாமல்
ஆறாத் துயரால் அழுதிளைத்த பெண்டுகள்போல்
வேறாய் மரங்கள்மிக வெம்பியே—பேறாக
ஈயாதான் செல்வம்போ லெல்லா மிலையுதிர்ந்து
சாயாச் சலித்துத் தளருமே—ஆயாம[illegible]
தீராப் பெருங்குறும்பு செய்த வுனை[illegible]
நேராகத் தண்டித்தல் நீதியே—நே[illegible]
வாரா யருவாய் வருவா யுனைப்பிடி[illegible]
பேரா ரினியொன்று பேசுவேன்—[illegible]
வதோகதியிற் போவென் றறைத லற[illegible]
சதாகதியாய் நீசெஞ் சரி.

199193

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
டிடட்ச்யாவனப்ராசா டிடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடுபல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் டிடடீ,மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
டிட ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

ஒரு கடிதத்தின் யாத்திரை:—1922-ம் ஆண்டில் போலண்டு தேசத்திலிருந்து பிரேஜில் நகருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அந்தக் கடிதம் சரியான விலாசம் தெரியாமல் 12 வருடங்களாக மூன்று தடவை உலகத்தைச் சுற்றி வந்திருக்கின்றதாம். கடிதத்தை அனுப்பியவர் இறந்து விட்டாராம். கடிதம் கிடைக்க வேண்டியவருக்கு இப்பொழுதுதான் கடிதம் கிடைத்ததாம். தபால் அதிகாரிகள் அவருக்கு 200 பவுன் நஷ்ட ஈடு கொடுத்துள்ளார்களாம்.

*   *   *

கொம்பு மனிதன்:—வடநாட்டிலுள்ள பிலாஸ்பூர் என்ற ஊரில் ஒரு மனிதனுக்கு ஆறு அங்குல நீளமும் மூன்று அங்குலச் சுற்றளவுமுள்ள கொம்பு தலையில் முளைத்திருந்ததாம். இந்தக் கொம்பு இம்மனிதருக்கு அவருடைய இருபதாம் வயதிலிருந்து ஐந்து வருட காலமாய் வளர்ந்துகொண்டு வந்ததாம். முடிவில் இக்கொம்பு டாக்டர்கைக்குப் பலிஆயிற்று.

*   *   *

9 வருடங்கள் தூங்காதவர்:—இங்கிலாந்து தேசத்தில் யார்க்ஷையரைச் சேர்ந்த 64 வயதுள்ள வில்லியம் பிளாக்பர்ன் என்பவர் 9 வருடகாலமாய்த் தூங்கவே இல்லையாம். டாக்டர்களும் அது தீர்க்கமுடியாத வியாதி என்று சொல்லிவிட்டார்கள். இவருடைய தசைநார்களின் கோளாறுதான் இவர் தூக்கமின்மைக்குக் காரணமாம். இவர் சாதாரண ஓய்வுக்குக்கூட மயக்க மருந்து உண்டு வருகிறார்.

விளம்பரத்தால் வேலை:—அமெரிக்காவில் ஒரு வாலிபனுக்கு வெகு நாளாக வேலை கிடைக்காமலிருந்தது. இப்பொழுது ஒரு விநோதமான விளம்பரத்தைப் பத்திரிகை மூலம் அறிவித்து ஒருவேலை தேடிக்கொண்டுவிட்டான். அவன் பத்திரிகையில் விளம்பரம் செய்ததாவது:—"ஒரு உபயோகமில்லாத வாலிபனுக்கு வேலை வேண்டும். கஷ்டமான காரியங்களைச்செய்யமாட்டான். ஒரு பாஷைதான் பேசவும் எழுதவும் தெரியும். ரஜா நாட்கள் அதிகமாக வேண்டும்; நன்ருகப் பொய்சொல்லக்கூடியவன்." இந்த வாலிபனின் நூதன விளம்பரத்தைப் பத்திரிகையில் பார்த்ததுச் சுமார் ஐம்பது முதலாளிகள் வாலிபனை டெலிபோன் மூலம் வேலைக்குக் கூப்பிட்டார்களாம். அவர்கள் வாலிபனை வேலைக்கு வைத்துக்கொண்டதற்கு அவனது இந்த நூதன யுக்தியே காரணம்.

*   *   *

விநோதத் திருட்டு:—பிரான்ஸ் தேசத்து எல்லைப்புறத்தில் சிலகாலமாக மிகமிக விநோதமான திருட்டு வியாபாரங்கள் நடந்து வந்தன. அவர்கள் திருட்டுச் சாமான்களை இறந்தவர்கள் மாதிரி பாடை கட்டிப் பிணம்போலவே பகிரங்கமாகவே தூக்கிச் சென்று வந்தார்கள். போலீசார் கண்காணவே இத்திருட்டுச் சாமான்களை அவர்கள் கொண்டுபோய் வந்தார்கள். ஒருநாள் ஒரு போலீஸ் அதிகாரி சந்தேகமுற்று அவர்கள் கொண்டுபோன பாடையைச் சோதித்துப் பார்த்ததில் அதில் பிணம் இல்லை! அநேக திருட்டுச் சாமான்கள் இருந்தன. உடனே அவர்கள் யாவரும் கைதியானார்கள்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, [illegible]China Bazar Road, [illegible]nade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஸு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதி[illegible]க் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இறும்! "காம சாஸ்திரம்" இறும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)